Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 23 வெள்ளிக்கிழமை (09.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 345



'நான் ஆதிவாசி' - பிள்ளையான் (08)



நாய்க்கு புதிய வேலை (11)



ஒசாமாவின் இறப்பு எனக்கு மகிழ்ச்சியில்லை (13)



தப்பினார் குஷ்பு (12)

# ஜனாதிபதி உத்தரவாதம் உண்ணாவிரதம் வாபஸ்

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் யாழ்.வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்த பின் நாளை நடத்தவிருந்த உண்ணாவிரதப் போராட்டத்தினைக் கைவிட்டனர்.**

யாழ்ப்பாணத்தின் அசாதாரண சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டு வந்து சுமுக நிலையைத் தோற்றுவிக்குமாறு கோரி நாளை நடாத்தப்படவிருந்த உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து யாழ்.வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேற்று மாலை ஜனாதிபதியுடன் நடாத்திய சந்திப்பின் போது ஜனாதிபதியால் வழங்கப்பட்ட உறுதிமொழிகளையடுத்து இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.வன்செயல்கள் தொடர்பாக பூரண விசாரணைகளை நடாத்துவதற்கு கொழும்பில் இருந்து விசேட குழு ஒன்றை அனுப்பி வைப்பதற்கு ஜனாதிபதி நேற்றைய சந்திப்பில் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், நாவாந்துறைச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கெதிரான வழக்குகளில் நெகிழ்ச்சித் தன்மையைப் பின்பற்றி அவர்களை விடுவிப்பதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியுடன், அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, சுசில் பிரேம ஜயந்த, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மற்றும் பொலிஸ் மாஅதிபர் என்.கே.இலங்ககோன் ஆகியோரும் நேற்றைய இச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

கிறீஸ் மனிதரால் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து தமிழ்த் தரப்பினர் ஜனாதிபதிக்கு விரிவாக எடுத்துக் கூறினர். தனக்கு இது பற்றி தெரியுமெனவும், இதற்காகவே தான் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை வடக்கிற்கு அனுப்பிவைத்து விசேட கூட்டமொன்றை நடத்தியதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## சேமலாப நிதி பெற தொடர்பு கொள்ளவும்

EMPLOYEES' PROVIDENT FUND

பழைய ஸ்தாபனங்கள் மற்றும் மூடிய ஸ்தாபனங்களில் இருந்து ஊழியர் சேமலாப நிதியினைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் தொழில் திணைக்களத்தினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென உதவித் தொழில் ஆணையாளர் திருமதி என். ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆவணங்கள் தொலைக்கப்பட்டிருந்தால், அவற்றை தொழில் திணைக்களத்தின் ஊடாக தேடுதல் மேற்கொண்டு மேற்படி ஊழியர் சேமலாபநிதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் நான்காவது மாடியில் அமைக்கப்பட்டுள்ள தொழில் திணைக்கள அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாமென அவர். மேலும் தெரிவித்தார்.(எஸ்)

## நிபுணர் குழு அறிக்கை மனித உரிமை பேரவைக்கு

(ஜெனிவா)

போர்க்குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பான் கீ மூனால் இலங்கை அரசின் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த நிபுணர் குழுவின் அறிக்கையை மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிப்பதா இல்லையா என்ற வாதப்பிரதிவாதங்களின் பின் அதனை மனித உரிமைப் பேரவைக்கு அனுப்புவது எனத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மர்ம மனிதன் பற்றி முறையிட விசேட பொலிஸ் கருமபீடங்கள்



(யாழ்ப்பாணம்)

மர்ம மனிதன் தொடர்பாக பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்கு வசதியாக விசேட பொலிஸ் கரும பீடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நேற்று இது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றது.

மர்ம மனிதன் விவகாரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அச்ச நிலையைப் போக்க 8 விசேட பொலிஸ் கருமபீடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக காங்கேசன்துறை, பலாலி, தெல்லிப்பளை, இளவாலை, நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை ஆகிய இடங்களிலேயே இந்த விசேட கருமபீடங்கள் திறக்கப்பட்டுள்ளன. கிறீஸ் மனிதன் தொடர்பாக எந்தவித முறைப்பாடுகளும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், கோவில்களில் நடக்கின்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தற்போது எது நடந்தாலும் அது மர்ம மனிதனுடன் (15ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற உறுப்பினர் குறைப்பு முடிவை மாற்ற ஜனாதிபதியிடம் மனு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் முடிவை இரத்துச் செய்யும்படி ஜனாதிபதியைக் கோரும் கவனயீர்ப்பு பிரேரணை ஒன்று யாழ்மாநகர சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.மாவட்ட வாக்காளர் இடாப்பை திருத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கின்ற முடிவை மேற்கொள்கின்ற போது தேர்தல ஆணையாளர் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுத்திருக்க வேண்டும் என்று தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீண்டகால யுத்தத்தின் காரணமாக யாழ்.தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வெளியூர்களில் இடம்பெயர்ந்து அத்துடன் இந்தியா மற்றும் பிறநாடுகளில அகதிகளாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் விரைவில் தங்களது பிரதேசங்களுக்குத் திரும்ப விரும்புகின்றனர். ஆனால், பல்வேறு காரணங்களினால் இந்த (15ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலை இளைஞனுக்கு பிணை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட ஏழாலையைச் சேர்ந்த இளைஞன் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

செல்வராஜா-செல்வகிரீஷன் (வயது-32) என்பவர் அரசுக்கு எதிராகவும், இனங்களுக்கு இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் வகையிலும் துண்டுப்பிரசுரம் வெளியிட்டார் (15ஆம் பக்கம் பார்க்க)


## நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தலைமைப் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் பொலிஸ் நடமாடும் சேவை ஒன்று நாளை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை கிளிநொச்சி இராமநாதபுரம் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச்சேவையில் பிறப்பு, இறப்புப் பதிவுகள், மருத்துவம் மற்றும் காப்புறுதி தொடர்பான சேவைகளும் இடம்பெறவுள்ளன. அனைவரும் வந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (77)

## மக்களது இயல்பு வாழ்வை குழப்பவென்றே பேசுவதை கூட்டமைப்பு நிறுத்த வேண்டும்



யுத்தத்துக்குப் பின்னர், நாட்டில் நிலைமைகள் மாறியிருக்கின்றன. மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியிருக்கிறார்கள். பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் பெற்றுக்கொண்ட இந்த வாழ்க்கையையும் குழப்பும் விதமாக அரசியல்வாதிகள் கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடாது என்று நாடாளுமன்றத்தில் சந்திரகுமார் எம்.பி. தெரிவித்தார்.


அவசரகாலச் சட்டத்தை நீக்கியதற்காக ஜனாதிபதிக்கு நன்றி கூறும் ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நல்ல சூழ்நிலையைக் குழப்பும் விதமாக மீண்டும் இந்த நாட்டில் அவசரகாலச் சட்டத்தையும் அதைப்போன்ற பயங்கரமான சட்டங்களையும் கொண்டு வரும் விதத்தில் எமது கருத்துக்களைத் தெரிவிப்பதோ அல்லது நடப்பதோ நியாயமானதல்ல. (15ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கூட்டத்திற்கு தடை

(பருத்தித்துறை)

அரச கட்டடங்களில் அல்லது கல்வி நிறுவனங்கள், வளாகங்கள் மற்றும் அரச காணிகள் என்பவற்றில் அரசியல் கூட்டங்கள் நடத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதென வட மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தாபன விதிக்கோவை (15ஆம் பக்கம் பார்க்க)



# அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காரை. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் முடிவு



(காரைநகர்)

காரைநகர் பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு விசேட செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு, நீர் நிலைகளை ஆழமாக்கி நிலவிவரும் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது தொடர்பில் துரித வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தோரிடம் பணிப்புரை விடுத்துள்ளார்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று தியாகராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற போதே இப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் காரைநகர் மட்டுமல்லாது தீவுப்பகுதியில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குரிய ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவி வரும் நிலையில் தற்காலிக இணைப்பினூடாக கல்வி நடவடிக்கைகளை வடமாகாண சபையூடாக ஒருவார காலத்திற்குள் முன்னெடுப்பதற்கு துறைசார்ந்த அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனிடையே காரைநகர் வைத்தியசாலையிலுள்ள தாதியர் பற்றாக்குறை மற்றும் இதர வளங்கள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் அவர்கள் ஆளணிப் பற்றாக்குறையுடன் பௌதீக வளப் பற்றாக்குறையும் விரைவில் நிவர்த்தி செய்யப்படுமெனவும் அத்துடன் இந்திய வீட்டுத் திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

குறிப்பாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் காணப்படும் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக அங்குள்ள கிணறுகள், கேணிகள் குளங்கள் போன்ற நீர்நிலைகளை ஆழமாக்கி புனரமைப்பதனூடாக குடிநீர்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் எனவும் ஆழமாக்கும் பணிகளை பருவமழை தொடங்குவதற்கு முன்னர் ஆரம்பிக்க வேண்டுமெனவும் துறைசார்ந்தோருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை செய்தார்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இதுவரை மின்சாரம் பெறப்படாத பகுதிகளுக்கு இலங்கை மின்சார சபை வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக துரிதப்படுத்துமாறும் அமைச்சர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

நேற்றைய கூட்டத்தில் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வடமாகாண சபையின் செயலாளர் சிவசுவாமி, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ், பிரதிப் பிரதம செயலாளர் இராசநாயகம், ஈ.பி.டி.பியின் காரைநகர் அமைப்பாளர் ரஜனி உள்ளிட்ட அரச திணைக்களங்களின் துறைசார்ந்த அதிகாரிகள், அரச மற்றும் அரச சார்பற்ற திணைக்களங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## புதிய அதிபர் பதவி ஏற்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ். யாழ்ரன் கல்லூரியில் வெற்றிடமாக இருந்த அதிபர் பதவிக்கு புதிய அதிபராக வேலுப்பிள்ளை முருகமூர்த்தி கடந்த செவ்வாய் முதல் பதவியேற்றுக் கொண்டார்.

கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் மகா வித்தியாலயத்தில் இவர் கடந்த 8 ஆண்டுகள் பிரதி அதிபராகக் கடமையாற்றி தற்போது அதிபர் பதவிக்கு உயர்த்தப்பட்டு இங்கு பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். இவர் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (50)




யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் அண்மையில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திய சைவ மகாநாட்டில் முதல நாள் நிகழ்வாக துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கலாபூசணம் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் குழுவினரின் தேவாரப் பண்ணிசைக் கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருப்பதைக் காணலாம்.

## பிரார்த்தனைக்கு நன்றி

தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதினத்தின் பேராயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி டானியல் எஸ்.தியாகராஜா நேற்றுமுன்தினம் அதிகாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு பிரயாணம் மேற்கொள்கின்ற போது வாகன விபத்தில் காயமுற்ற காரணத்தினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்விபத்தில் அவருடைய உயிர் பாதுகாக்கப்பட்டமைக்காக எல்லாம்வல்ல இறைவனுக்கும் அவருக்காக பிரார்த்தனை மேற்கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்ற அதேவேளையில், அவருடைய பூரண குணத்திற்காக தொடர்ந்து பிரார்த்தனைகளையும் வேண்டுதல்களையும் மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று தென்னிந்திய திருச்சபையின் செயலாளர் இ.ராஜ்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பளையில் வாகன விபத்து ஒருவர் பலி; சாரதி கைது

(கிளிநொச்சி)

பளை வன்னாங்கேணி பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற வாகன - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் பயணம் செய்தவர் ஸ்தலத்தில் பலியாகியுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதில் குறித்த பிரதேசத்தை சேர்ந்த சின்னக்குட்டி திருநாவுக்கரசு (வயது - 62) என்பவரே பலியானராவார்.

சைக்கிளில் வந்தவர் கடையில் பொருட்களை வாங்கி விட்டு வீதிக்கு செல்ல முற்பட்ட சமயம் எதிரே வந்த சிறிய ரக கூலர் வாகனம் சைக்கிளில் வந்தவரை மோதிவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பலியானவரின் சடலம் பிரேத பரிசோதனைக்குட் படுத்தப்பட்ட நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வாகன சாரதியை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (77)

## டெங்கு ஒழிப்பு யுத்தம் களம் இறங்கும் வணிகர் கழகம்

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது டெங்கு காய்ச்சல் தீவிரமாகப் பரவிவருவதால் இந் நோயைக் கட்டுப்படுத்த அனைத்து வர்த்தக உரிமையாளர்களும், வர்த்தக ஊழியர்களும் தங்களது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கவேண்டுமென யாழ். வணிகர் கழகம் கேட்கின்றது.

வர்த்தக நிலையத்தில் பாவிக்கப்படாத பொருட்கள் யாவும் அகற்றப்பட்டு தினமும் சுத்தமாக அவ்விடத்தை வைத்துக்கொள்ள வேண்டும். தண்ணீர் தேங்காதவாறும், அத்துடன் அருகிலுள்ள கழிவு நீர் வடிகால்களில் தேங்காதவாறும் விசேடமாக உணவகங்கள் கழிவுநீரை முறைப்படி அகற்றியும் டெங்கு நுளம்புகள் பெருகாதவாறும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆகவே வர்த்தக நிலைய உரிமையாளர்களும், அதன் ஊழியர்களும் வர்த்தக நிலையத்தையும் அதன் சுற்றாடலையும் துப்புரவு செய்து கழிவுகளை வாகனங்கள் மூலம் வெளியே அகற்ற வேண்டும் அல்லது யாழ். மாநகர சபை குப்பை அகற்றும் வாகனங்கள் வரும்போது கழிவுகளை அவர்களிடம் கையளிக்கவேண்டும்.

யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவு அலுவலர்கள் மற்றும் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கடைகளுக்கு விஜயம் செய்து கண்காணிக்கவிருப்பதனால் தங்கள் வர்த்தக நிலையத்தையும் அதன் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்குமாறும் குடாநாட்டு மக்களிற்கு மேலும் டெங்கு நோய பரவாலும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பை வர்த்தகர்கள் வழங்கவேண்டும் என்றும் யாழ். வணிகர் கழகம் வர்த்தக நிலைய உரிமையாளர்களைக் கேட்டுள்ளது.

## வீதி விபத்தில் இளைஞர் காயம்

(சண்டிலிப்பாய்)

சுன்னாகம் சிவன் கோவிலடி வீதியில் நடந்து சென்ற இளைஞர் ஒருவரை மோட்டார் சைக்கிள் மோதிச்சென்றது. இச் சம்பவம் மதியம் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.


சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த திவ்வியராஜ் (வயது - 18) என்பவரே படுகாயமடைந்து யாழ். போதனா . வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## மீண்டும் இயங்கும் ஆரம்பப் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா கனிஷ்ட பிரிவு பாடசாலை கடந்த புதன்கிழமை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். இராதாகிருஸ்ணன் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீவிக்னேஸ்வரா ஆகியோர் 22 ஆண்டுகளின் பின்னர் இப்பாடசாலையை வைபவ ரீதியாகத் திறந்துவைத்தனர்.

இப்பாடசாலை அதிபராக கொக்குவிலைச் சேர்ந்த ஏ.இளங்கோவன் நியமிக்கப்பட்டுள்ளார். திறப்பு விழாவன்று 22 மாணவர்கள் பாடசாலைக்கு பிரசன்னமாகியிருந்தனர் இவ்விழாவுக்கு அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம சேவகர்கள் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர். (50)



யாழ். அடைக்கல நாயகி ஆலய வருடாந்த பெருவிழா நேற்றைய தினம் இடம்பெற்றது. விழாவில் அன்னையின் திருப்பவனியையும், திருச்சொரூப ஆசீர்வாதம் மற்றும் கலந்துகொண்ட பக்தர்களையும் காணலாம். (52)

உடல், வாய், மனம், பணம், என்ற நான்கு வகைகளிலும் பாவம் செய்கிறோம். இதற்கு பிராயச்சித்தமாக உடலால் உதவியும், வாயால் பகவான் நாமமும், மனதால் தியானமும் பணத்தால் தர்மமும் செய்ய வேண்டும். -காஞ்சிப்பெரியவர்-

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## இன்னுமா நம்புகிறார்கள் மக்கள்?

"தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்" என்று முதுதமிழ்த் தலைவர் சொல்லிப்போனார். தனது பிற்கால இளவல்களைப் பற்றிய தீர்க்கதரிசனமே அவர் கருத்தில் வெளிப்பட்டிருப்பதை இன்று புரிந்துகொள்ள முடிகின்றது.

இன்றுள்ள தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர் பேசுவதையெல்லாம் கேட்டால், அந்தக் கவுரவால் கூட தமிழ் மக்களைக் காப்பாற்றிவிட முடியாதவாறு மறித்தடிக்கும் கெட்டித்தனமே காணமுடிகிறது.

கெரில்லாப் போர் முறையின் அந்தரங்கத்தில் இருக்கக் கூடிய ஓர் உத்தி வெளிப்படையாகப் பேசப்படுவதில்லை என்றாலும் நிதர்சனமானது. மக்கள் வாழும் குறிப்பிட்ட ஒரு பகுதியிலிருந்து கெரில்லாக்கள் அரச படையினரைத் தாக்கினால், படையினர் மக்களினுள் மறைந்திருக்கும் கெரில்லாப் படையினரை இனங்காண முடியாது அப்பகுதி மக்கள் அனைவரையும் திருப்பித் தாக்குவார்கள். இதன் பின் அப்பகுதி மக்கள் தவிர்க்க முடியாமல் கெரில்லாப் படையினரின் வன்முறையைச் சார்ந்து, அவர்களது ஆதரவாளர்களாகி விடுவார்கள்.

இப்படியொரு கெரில்லா உத்தியையே சுட்டமைப்புத் தலைவர்கள் இன்னமும் கடைப்பிடிக்கின்றனர். துரதிர்ஷ்டம் என்னவென்றால், ஆயுத வன்முறையால் அழிந்தது போம் மிஞ்சியதை 'ஒரு கை பார்க்க' வாய் வன்முறையைத் தொடர்கிறார்கள். எதிர்த்தரப்பைப் பார்த்து, "எமது மக்களை நீ இன்னுமின்னும் தாக்கு: அப்போதுதான் கிடைக்கும் நமக்கு வாக்கு!" என்று கொந்தளிப்பு வசனங்களைக் கூர் தீட்டி எறிந்துகொண்டிருக்கிறார்கள்.

"கிறீஸ் பூதத்தைத் தடுக்காவிடின் மீண்டுமொரு போராட்டம் வெடிக்கும்" என்று நேற்றொருவர் வெடித்திருக்கிறார். இன்னும் என்ன செய்யக் கருதி இருக்கிறார்களோ என்று நினைக்க நமக்கு நெஞ்சு பதறுகிறது. வெடிக்கவைப்பதற்குத் திரி கொளுத்தி விடுவதைத் தவிர, வேறொன்றும் மாத்தி யோசிக்க மாட்டார்களா? நெருப்பணைத்து மக்கள் நிம்மதியாய் வாழவிட மாட்டார்களா?

இன்னும் கொஞ்ச நாள் முன்னால், "வேட்டியை மடித்துக் கட்டுவோம்" என்று முழங்குகிறார் மற்றொரு 'மக்கள் தலைவர்'! தெருச் சண்டியர்களின் வீரம் கேட்டு வியந்து கொண்டிருப்பது தவிர வேறொன்றும் யோசிக்க மாட்டாமல் தான் இருக்கிறார்களா எமது மக்கள்? என்ன நடக்கிறது இங்கே? வேட்டியை மடிச்சுக் கட்ட இது என்ன பாக்கியராஜ் படமா? பரிதவிக்கும் மக்களின் வாழ்வல்லவா?

அரசுக்கும் பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கும் உசுப்பேற்றும் விதமாகச் சவால் விட்டுக்கொண்டிருக்கும் இந்த வீர வசனங்களைக் கேட்டால், திரைப்படங்களில் சிரிக்கவைத்து வயிற்றைப் புண்ணாக்கும் கைப்புள்ள வழவேலு நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

"முழஞ்சா என் ஆளுமேல கை வைச்சுப் பாரு" என்று உடலை நெளித்து விரலை ஆட்டுகிறார் வழவேலு. இவர்களோ, "மக்கள் மேல கையை வைச்சா என்ன நடக்கும் தெரியுமா?" என்று சர்வதேசத்தின் தோளிலேயே கைபோட்டிருக்கும் பாவனையில், வேட்டியை மடித்துக் கட்டி மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

வழவேலுவின் எதிராளி, "அழவாங்கினதெல்லாம் ஞாபகமில்லையா?" என்று கேட்கிறார்.

உடலை மேலும் நெளித்து "அது போன மாசம்... முழுஞ்ச கதை..., இப்ப முழுஞ்சா தொட்டுப்பாரு" என்கிறார் வழவேலு.

கதை இத்துடன் முடியவில்லை. இதன் பிறகுதான் எமது மக்கள் வருகிறார்கள்.

உடல் சிதிலமாகித் தெருவால் போகும் வழவேலுவைப் பார்த்து மக்கள் வியக்கிறார்கள். 'அழ குடுத்த கைப்புள்ளைக்கே இவ்வளவு 'டமேஜ்' என்றால், அழ வாங்கினவன் கதி எப்பிடியிருக்கும்!" என்று வழவேலுவைப் பார்த்துப் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறார்கள்.

"இன்னமாடா இந்தச் சனம் என்னை நம்புது?" என்று கேட்டுக்கொண்டே போகிறார் வழவேலு.

அந்தக் கேள்வியைத்தான் தங்களுக்குள்ளேயே மனப்பூர்வமாகக் கேட்டபடி இருப்பார்களோ நம் 'தமிழ்த் தலைவர்களும்?

- ஆசிரியர்

# வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு வடக்கில் 2500 குடும்பங்கள் நன்மை

(வவுனியா)

போருக்கு பின்னரான அவசர வறுமை ஒழிப்பு உதவித்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 2500 குடும்பங்களை இணைத்துக் கொள்ளும் திட்ட அங்குராப்பண வைபவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தத் திட்டத்தினை வைபவரீதியாக அங்குராப்பணம் செய்து வைத்தார்.

ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது அந்த வகையில் ஜப்பான் நாட்டு தூதுவர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிட பிரதிநிதி, மற்றும் முக்கிய திணைக்கள தலைவர்களும் வர்த்தக வாணிப அமைச்சர் றிசாட் பதியூதீன், வடமாகாண ஆளுநர், அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், வன்னி பிராந்திய கட்டளைத் தளபதி, சிரேஸ்ட பொலிஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (39)

## வெளிவாரி வணிகமாணி பட்டம் பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட வணிகமாணி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து வணிகமாணிப் பட்டம் பெறுவோர் பட்டியல் வெளியாகியுள்ளது. இம் முறை 52 மாணவர்கள் வணிக மாணிப்பட்டம் பெறுவதுடன், இவர்களில் ஒரு மாணவர் இரண்டாம் தரம் மேற்பிரிவிலும், 51 மாணவர்கள் சாதாரண சித்தியிலும் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத் தொழிற் திணைக்களத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவமும் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இதில் 3 மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லை பிரதி தொழில் ஆணையாளர் க.கன கேஸ்வரன் நாட்டி வைத்தார்.

இக் கட்டடம் 36.9 மில்லியன் ரூபா செலவில் அடுத்த வருடம் எப்ரல் மாதத்திற்கு முன்னர் அமைத்து முடிக்கப்பட வேண்டியுள்ளதுடன் இந் நிதிதொழிற் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலமே அமைக்கப்படவுள்ளதாக ஆணையாளர் இந்த வைபத்தின் போது தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், உதவித்தொழில் ஆணையாளர் என்.ஜெகதீஸ்வனை, உட்பட பிரதம பொறியியலாளர் எஸ்.வினோதினி, திட்டபொறியிலாளர் கே.திருக்குமார் ஆகியோர் கலந்து கொண்டார். (எஸ்)

## போயாதின நிகழ்வு

(தும்பளை)

பருத்தித்துறை சத்திய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் மாதாந்த போயாதின நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

அதிகாலை 5.30 மணிக்கு நகரசங்கீர்தனத்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வு தொடர்ந்து காலை 9.15மணியளவில் பாலவிகாஸ் சிறுவர்களுக்கான கல்வி கட்டமும் அதனைத் தொடர்ந்து போயாதின விசேட பஜனையும் இடம்பெற்று நண்பகல் 12 மணியளவில் சாயி தரிசனம் ஒன்றும் விடியோப் படக் காட்சியும் காண்பிக்கப்படவுள்ளது. (62)

## பாதுகாப்பு பட்டி கட்டாயம்

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் விற்பனை செய்யப்படுகின்ற அனைத்து லொறிகளிலும் பாதுகாப்புப் பட்டி பொருத்தப்பட்டிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

விபத்துக்களைத் தடுக்கும் பொருட்டு, ஒக்ரோபர் மாதம் முதல் கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து லொறிகளிலும் பாதுகாப்புப் பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் லலித் தர்மப்பிரிய தெரிவிக்கிறார்.

## 2 பாடசாலைகள் புனரமைப்பு

(அம்பலப்பெருமாள்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் துணுக்காய் கல்வி வலயத்தில் 2 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் பெரியகுளம் அ.த.க பாடசாலை, தெனியன்குளம் அ.த.க பாடசாலை ஆகிய 2 பாடசாலைகளுமே புனரமைக்கப்பட்டுவருகின்றன. (121)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(வேலணை)

வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் காலை 10.00 மணியளவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள இப் பொதுக்கூட்டம் பழைய மாணவர் சங்கத் தலைவர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

புதியாண்டுக்கான நிர்வாக சபை ஒன்று தெரிவு செய்யப்படவுள்ளதோடு, கல்லூரியினது எதிர்கால வளர்ச்சி, முன்னேற்றங்கள் பற்றி இப்பொதுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

எனவே, கல்லூரியின் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது இக்கலந்துரையாடலில் சமூகமளிக்குமாறு பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் க.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (05)

## சர்வதேச எழுத்தறிவு தினவிழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்தும் சர்வதேச எழுத்தறிவு தின விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் தேசிய கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி, கலாநிதி செல்வி நிர்மலாதேவி நல்லையா பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண கல்வித்திணைக்கள 2ஆம் மொழி சிங்கள பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுதர்ஷி ஹப்புகொடுவ சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசிரியரையை செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட எழுத்தறிவு தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் மற்றும் மாகாண 2 மொழி தேர்வில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கான 'பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தொழிற்பயிற்சி நிலையத்தினரது கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. (06)

## விவசாயக் கண்காட்சியை ஆர்வமுடன் பார்வையிடும் மாணவர்கள்

(திருநெல்வேலி)

திருநெல்வேலியில் நடைபெறும் விவசாயக் கண்காட்சியை பெரும் எண்ணிக்கையான பாடசாலை மாணவர்கள் சென்று பார்வையிட்டனர்.

யாழ்.குடாநாட்டில் பலவேறு பிரதேசங்களையும் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சகிதம் இந்தக் கண்காட்சியை பார்வையிட்டு வருகின்றனர். கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட விவசாயப் பொருட்கள் சம்பந்தமான விளக்கங்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுவருகின்றன.

தமது விவசாயம் சம்பந்தமான கற்றல் நடவடிக்கைக்கு இக் கண்காட்சி பெரிதும் உதவுவதாக மாணவர்கள் தெரிவித்தனர். (வி)

## பால்மா வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தண்ணீரூற்று ஸ்ரீ சத்திய சாயி பாபா சேவா நிலையத்தினால் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு இலவசமாக இரண்டு பால்மா பைக்கற்றுக்கள் அண்மையில் வழங்கப்பட்டது.

நிலைய உபதலைவர் க. தவராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆறு மாதத்திற்கு மேற்பட்ட இரண்டு வயதிற்குட்பட்ட 106 குடும்பங்களுக்கே இப்பால்மா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன. (04)

## விதவைகள் மறுவாழ்வுக்கு உதவுக சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள்!

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விதவைப் பெண்கள் பொருளாதார ரீதியாக பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த அனர்த்தங்களினால் கணவனை இழந்த நிலையில் வாழும் விதவைப் பெண்களும், கணவனைப் பிரிந்து வாழும் பெண்களுமே பொருளாதார ரீதியாக நாளாந்தம் பாதிக்கப்பட்டு வருவதாகவும், இவர்கள் தமது வறுமை நிலையினால் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய தமது பிள்ளைகளைத் தொழிலுக்கு அனுப்பி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், தொழிலுக்காகச் செல்லும் இப்பிள்ளைகள் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாவதாகவும், அவர்களது எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்கள் எதிர்நோக்கும் பொருளாதாரக் கஷ்டங்களிலிருந்து மீள்வதற்கும் தமது பிள்ளைகள் கல்வியைத் தொடர வைப்பதற்கும் ஏதுவாக அமையும் என சமூக ஆர்வலர்களினால் தெரிவிக்கப்படுகிறது. (101)

## செல்வச்சந்நிதி இரதோற்சவம்

(யாழ். நிருபர்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இதில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் 12ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

ஆலய இரதோற்சவத்திற்கு செல்லும் அடியார்களின் நலன்கருதி யாழ்ப்பாணத்திலிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் அரச, தனியார் பேருந்துச் சேவைகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அடியார்களின் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் ஆலயச் சூழலில் உள்ள மடாலயங்களில் அன்னதான சேவைகளும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினரால் தெரிவிக்கப்படுகிறது. (10)

# பல துறைகளை கணினி ஆக்கிரமித்தாலும் உபசரணையாளராகப் பழகுவது மனிதர்களே

## தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

பல துறைகளை கணினி ஆக்கிரமித்துள்ள போதிலும் உபசரணையாளரை கணினியால் ஆக்கிரமிக்க முடியாதுள்ளது. ஒருவருடன் உபசரணையாகப் பழகுவதற்கு மனிதர்களைவிட இந்த உலகில் வேறு எதுவுமே இல்லையென இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் மகிந்த ஜயதிலக தெரிவித்தார்.

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் இடம்பெற்ற இப்பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்துப் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில், இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை நாட்டின் பல பாகங்களிலும் ஹோட்டல் உபசரணையாளர் பயிற்சிநெறியினை நடத்தி வருகிறது. இத்தகைய பயிற்சி நெறியை பல வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில் நடத்துகின்றோம். இந்த அரிய வாய்ப்பினை இங்குள்ள இளைய சமூகத்தினர் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த இளையோருக்கு சிறந்த தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் பணிப்புரைக்கமைய இந்தப் பயிற்சிப் பட்டறை இங்கு ஆரம்பிக்கப்படுகின்றது.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை யாழ்ப்பாணத்தில் எட்டு பயிற்சி நிலையங்களில் 21 கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. ஹோட்டல் பயிற்சி நெறியை பல வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில் நடத்துகிறது.

இந்தப் பயிற்சியைச் சிறப்பாக மேற்கொண்டால் சிறந்த வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதுடன் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவியாக இருக்கும்.

எண்ணெய் வளத்திற்கு அடுத்த படியாக அதிக வருமானம் ஈட்டித் தருவது உல்லாசப் பயணத் துறையே. எண்ணெய் வளம் எல்லா நாடுகளுக்கும் சாத்தியமானதல்ல. ஆனால் உல்லாசப் பயணத்துறை எல்லா நாடுகளிலும் சாத்தியமாகும்.

பல துறைகளை கணினி ஆக்கிரமித்துள்ளது. ஆனால், இந்தத் துறையை கணினியால் ஆக்கிரமிக்க முடியாது. ஒருவருடன் உபசரணையாகப் பழகுவதற்கு மனிதர்களே தேவை என்றார். (கா)

## நிறுவுநர் நினைவு நாளும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வாழ்வகத்தின் நிறுவுநர் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆ. ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். இந்திய துணைத் தூதுவராலய தூதுவர் வி. மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், இலங்கை மின்சார சபையின் பிரதேச மின் பொறியியலாளர் ச. ஞானகணேசன், யாழ். இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம், சுன்னாகம் ராஜா கொம்ளக்ஸ் உரிமையாளர் ஆ. இராஜசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவவிருந்தினராக தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் நினைவுப் பேருரையை சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா நிகழ்த்தவுள்ளதுடன் ஒலிம்பிக்கில் வெற்றிபெற்ற சிவபூமி மனவளர்ச்சி பாடசாலை மாணவன் சிவராஜா துஷ்யந்தன் கௌரவிக்கப்படவுள்ளார். தொடர்ந்து வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

## விவசாயக் கண்காட்சி இறுதி நிகழ்வு நாளை

(யாழ். நிருபர்)

இயற்கையுடன் இணைந்த நிலைபேறான விவசாயத்தை நோக்கி என்னும் தொனிப் பொருளிலான விவசாயக் கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண விவசாயத் திணைக்களத்தினால் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் திருநெல்வேலியில் நடத்தப்பட்டுவரும் இவ்விவசாயக் கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்களாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், வடமாகாண அபிவிருத்தி செயலணிக்குழுவின் தலைவருமான பசில் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

## டெங்கு அபாயத்தைக் கட்டுப்படுத்த பற்றைகளுக்கு புகை விசிறல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீண்டும் டெங்கு அபாயம் ஏற்பட்டதையடுத்து யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினரால் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இதன் பொருட்டு அவர்கள் வீதிகளில் பற்றைக்காடுகளாகக் காணப்படும் இடங்களில் கன்ரர் வாகனத்தில் சென்று புகையூட்டும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று அவர்கள் சுவாமியார் வீதி, கொழும்புத்துறை வீதி, ஈச்சமோட்டை வீதி, புங்கன்குளம் வீதிகளில் பற்றைக்காடாகக் காட்சி தரும் இடங்களில் புகையூட்டியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை, கொழும்புத்துறை, துண்டிப் பகுதிகளிலும் இவ்வாறான புகையூட்டும் செயற்பாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (21)

## வினோபாஜி ஜயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)


நீர்வேலி வினோபாஜி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியின் பிரதம சீடர் வினோபாஜியின் 117ஆவது ஜயந்தி தின நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு மேற்படி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் இ. முருகையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்புரையை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.ஜி. தங்கவேல், அகில இலங்கை காந்தி சேவா சங்க யாழ். கிளையின் தலைவர் கா. கார்த்திகேசு ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து காந்தியம் பத்திரிகை வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் இ. சிவகரன், பதிலுரையை காந்தியம் ஆசிரியர் சாந்தன் சத்தியமூர்த்தி ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கிராமப் பெரியார், பொதுமக்கள் என சகல தரப்பினரையும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டனர்.








நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு கடந்த வாரம் அலைஸ் நிறுவனத்தால் சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீநிகரன், நிறுவனத்தின் இணைப்பாளர் சுதாகர் ஆகியோர் மாணவர்களுக்கு உணவுப் பொதி வழங்குவதையும், பொதிகள் வழங்கப்பட்ட மாணவர்களையும் காணலாம். (12)

# குடாநாட்டில் துரிதப்படுத்தப்படும் டெங்கு நோய்க் கட்டுப்பாடு நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் யாழ்மாவட்டத்தில் அனுஷ்டிக் கப்பட்டுவரும் டெங்குக் கட்டுப் பாட்டு வாரத்தை முன்னிட்டு கடந்த இரண்டு நாட்களாக குடா நாட்டின் பல்வேறு இடங்களி லும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கள் துரிதகதியில் மேற்கொள் ளப்பட்டன .

இதன்படி நேற்று முன்தினம் யாழ்மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 87 கிராமங்களில் ஒலிபெருக்கி மூலமாக பிர சாரம் செய்யப்பட்டுள்ளதுடன் 42 இடங்களில் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டுள்ளது. 55 இடங் களில் சிரமதான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது. 101 டிராக் டர் லோட் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. 3145 வீடு களும், 96 பாடசாலைகளும், 147 வர்த்தக நிலையங்களும், 62 அரச, அரசசார்பற்ற அலுவல கங்களும், 17 சந்தை வடிகால் களும், 113 வணக்கத்தலங்க ளும், 120 பராமரிப்பற்ற காணிக ளும் பரிசோதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 713 வீடுகளிலும், 28 பாடசாலைகளிலும், 39 வர்த்தக நிலையங்களிலும், 12 அரச, அரச சார்பற்ற அலுவலகங் களிலும், 9 சந்தை வடிகால் களிலும், 33 வணக்கத்தலங் களிலும், 57 பராமரிப்பற்ற காணிகளிலும் டெங்கு நுளம்புகள் பெருக்க மடையக் கூடிய இடங்கள் கண் டுபிடிக் கப்பட்டு அழிக்கப்பட் டுள்ளன. உடுவில், கோப்பாய், கர வெட்டி, பருத்தித்துறை, சண் டிலிப்பாய், சாவகச்சேரி, ஊர் காவற்றுறை, யாழ் மாநக ரசபைப் பகுதிகளில் 46 இடங் களில் எச்சரிக்கைக்கான சிவப்பு நிற ஸ்ரிக்கர்கள் ஒட் டப்பட்டதுடன், யாழ் மாநகர சபை, சண்டிலிப்பாய், உடுவில், நல்லூர், சங்கானை, பருத்தித் துறை ஆகிய இடங்களில் 38 பேருக்கு வழக்குத் தொடர்வதற் கான முன்னறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளது. நுளம்புச் செறிவு அதிகமான மற்றும் டெங்கு நோயாளர்கள் இனங்காணப் பட்ட பகுதிகளில் புகையூட்டல் நடவடிக்கைகளும் தீவிரப்படுத் தப்பட்டுள்ளது.

டெங்கு நோய் மற்றும் டெங் குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை கள் தொடர்பாக ஆலோசனை கள் மற்றும் முறைப்பாடுகளுக் காக விசேட தொலைபேசி இலக்கம் 0213205796 உடன் தொடர்பு கொண்டு தகவல் களை தெரிவிக்கவோ அல்லது பெற்றுக் கொள்ளவோ முடியும்.

தொற்றுநோய் அறிக்கை யின் பிரகாரம் சாவகச்சேரி கச் சாய் வீதிப் பகுதியில் டெங்கு குருதிப்பெருக்கு நிலையில் நோயாளியொருவர் இனங் காணப்பட்டுள்ளார். தற்போது டெங்கு நோய் பரவிவருவ தால் காய்ச்சல் நோயாளர்கள் நேரகாலத்துடன் தகுதியான வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அநியாயமான உயிரிழப்புகளை தவிர்த்துக்கொள்ள முடியும். யாழ் மாவட்டத்தில் இன்றைய தினம் டெங்கு நோயால் இறப் புகள் எதுவும் ஏற்படவில்லை.

# புனர்வாழ்வு பெற்ற 500 பேர் தெற்கு நோக்கி ரயில் பயணம்

(வவுனியா)

வடக்கு தெற்கு உறவுப் பால நிகழ்ச்சித் திட்ட அடிப்படையில் புனர்வாழ்வு பெற்ற 500 பேர் நேற்று அதிகாலை 3-30 மணியள வில் வவுனியாவிலிருந்து ரயில் மூலம் தெற்கு நோக்கி புறப் பட்டனர் மிகவும் மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி ரயில் பயணம் செய்தனர் என வவுனியா ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்

புனர்வாழ்வு நிலையத்திற்கு பொறுப்பான இராணுவ அதிகாரி கள் சிலரும் இவர்களுடன் பயணம் செய்துள்ளனர்.

தென்னிலங்கையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் இவர்கள் கலந்து கொள்வார்கள் கதிர்காமம், காலி போன்ற. இந்துக் கோவில்களுக் கும் செல்லத் திட்டமிட்டுள்ளனர் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை கள் மறு சீரமைப்பு அமைச்சு, இளைஞர் விவகார அமைச்சு இவர் களுக்குரிய நிகழ்ச்சித் திட்டத்தினை ஒழுங்கமைத்துள்ளது. (39)

# மர்ம மனிதன் நடமாட்டத்தால் யாழ். பாசையூரில் மக்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

பாசையூர், புதுக்குடியிருப்புப் பகுதியில் மர்ம மனிதனின் நடமாட்டம் தென்பட்டதையடுத்து அப்பகுதியில் அச்சம் ஏற்பட்டது.

இச்சம்பவமானது கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில், குறிப்பிட்ட பகுதியில் இரவு வேளையில் அப் பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் தனது சுய கருமத்தின் நிமித்தம் வெளியே வந்தபோது அவரின் வீட்டுக்கு எதிரே உள்ள வீட்டின் மேற் சுவர் பகுதியில் ஒருவர் ஒளிந்து கொண்டிருந் ததை அவதானித்துள்ளார். அவர், சத்தம் எழுப்பி, அயலவர்கள் ஒன்றிணைந்து அவரைத் துரத்திச் சென்றபோது, குறிப்பிட்ட நபர் எல்லைச் சுவர்கள் வழியாகப் பாய்ந்து தலைமறைவானார்.

பின்னர் அவர் தப்பிவிட்டார் என்று எல்லோ ரும் வீடுகளுக்குச் சென்றவுடன், இரவு 12 மணியவில் அப்பகுதியைச் சேர்ந்த பெண்ணொ ருவர் வெளியே வந்தபோது, அவரின் மலசல கூடப் பகுதியில் மர்ம நபர் ஒளிந்திருந்ததை அடுத்து அவர் அபயச் சத்தம் எழுப்பி எல்லோ ரையும் அழைத்தார். இதனால் தப்பிக்க இடம் தெரியாது மர்ம நபர் பிரதான வீதிக்கு அண்மித் துள்ள திருக்குடும்ப கன்னியர் மடத்தினுள் பாய்ந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதனால் அப்பகுதியில் மக்கள் இரவு நித்தி ரைக்குச் செல்லாது விடியும் வரையும் விழித் திருந்தனர். அத்துடன் குறிப்பிட்ட நபரை இரவு 7 மணிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் இறக்கிவிட்டுச் சென்றதையும் அப்பகுதி மக்கள் நன்கு அவதானித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய்,மாந்தை கிழக்கு ஆகிய இரு பிரதேச செயலகங்களினது ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெற வுள்ளது.

இதில் துணுக்காய் பிரதேச செயலக ஒருங்கி ணைப்புக் குழுக்கூட்டம் முற்பகல் 9.30 மணிக்கும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டம் பிற்பகல் 1.30 மணிக் கும் அவ்வவ் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (121)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(09.09.2011 – வெள்ளிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஆவணி 23 ஆம் நாள்.
இராகுகாலம் 10.34–12.04, சுபநேரம் 6.04 –7.34,
நட்சத்திரம்: திருவோணம் பி.இ 2.33 வரை
திதி: துவாதசி பி.ப12.29 வரை
ஆவணி ஓணம் பிரதோஷ விரதம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணம் வரும், காரிய சித்தி, உல்லாசப் பயணம், தொழில் விருத்தி, தெய்வதரிசனம்.

ரிஷபம:– காரியத் தடை பணக் கஷ்டம், இனசன ஒ ழைப்பு, குடும்பத் தில் கவலை, பயனற்ற பேச்சு.

மிதுனம் :– பணம் வரும், விருந்து பசாரம் உல்லாசப் பயணம், வீண் அலைச்சல், வெளிநாட்டு உதவி.

கடகம்:– கடன் வாங்குதல், பணக் கஷ்டம், எதிரியை வெல்லுதல், நினைத் ததைச் சாதித்தல், சகோதர பாசம்.

சிம்மம்:– பணம் வரும், அதிகாரப் போட்டி, வீண் அலைச்சல், வெளி நாட்டு உதவி, சுற்றத்தார் ஆதரவு.

கன்னி :– சகோதர வெறுப்பு, பணக் கஷ்டம், நினைத்ததைச் சாதித்தல், அதிகாரப் போட்டி, கடன் வாங்குதல்.

துலாம் :– பம் வரும் வெளிநாட்டு உதவி, உடல் நலக்குறைவு, மருத் துவச் செலவு, சகோதர பாசம்.

விருச்சிகம்:– சுற்றத்தார் ஆதரவு, பணம் வரும், பெரியோர் பாராட்டு தேக ஆரோக்கியம், தொழில் வெற்றி.

தனுசு:– பணக் கஷ்டம், வசதிக்குறைவு, அதிகாரப் போட்டி, காரிய சித்தி, தேக ஆரோக்கியம்.

மகரம:– பெரியோர் பாராட்டு, பணம் வரும், கடன் வசூல், இனசன அழைப்பு, வெளிநாட்டு உதவி.

கும்பம் :– பணக்கஷ்டம், இனசன அழைப்பு, அதிகாரப் போட்டி, உறவினர் வருகை, நல்வாய்ப்பு.

மீனம் :– பயனற்றவேலை, பணம் வரும் , உடல் நலம் பாதிப்பு, காரி யத்டை, வெளிநாட்டு உதவி.

# ஆய்வு நூல் அறிமுகவிழா

(யாழ். நிருபர்)

ஆசான் ஆர்.எஸ். நடராசா எழுதிய சேர். பொன் இராமநாதனின் கல்விச்சிந்தனையும், கல்விப் பணியும் ஆய்வு நூல் அறிமுகவிழா எதிர்வரும் 17.ஆம் திகதி சனிக்கிழமை கோயில்வீதி, நல்லூரில் அமைந்துள்ள இந்துமாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

துர்க்கா துரந்தரர் ஆறு திருமுருகன் தலை ம்மயில் நடைபெறும் இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி தம்பதிகள் பிரதமவிருந் தினர்களாகவும், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் சிறப்பு விருந் தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

நூல் அறிமுகவுரையினை சிற்பி சரவண பவனும், நூல் ஆய்வுரையை கலாநிதி பண்டிதர் செ. திருநாவுக்கரசும் நிகழ்த்துவர். (10)

# ஈச்ச மோட்டை ஐயனார் வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை, ஐயனார் கோயிலுக்கு வரும் வீதி தற்போது கற்கள் பறிக்கப்பட்டு, நிரவப் பட்டுள்ளது.

இந்த வீதி பல வருடங்களாகத் திருத்தப்படா மல், பாரிய கற்கள் வெளியே கிளம்பி குன்றும் குழியுமாகக் காணப்பட்டது. மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நின்பதால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக இந்த வீதி காணப்பட்டது.

தற்போது இந்த வீதிக்கு கற்கள் பறிக்கப்பட்டு, நிரவப்பட்டுள்ளது.

மேலும் துண்டிக்குச் செல்லும் புனிதபுரம் பகுதியில் காசுக்கான வேலைத்திட்டம் அடிப்படை யில் பொதுமக்களால் துப்புரவாக்கப்பட்ட இடங் களில் வீதி அமைக்கும் பொருட்டு கற்கள் நிரவப்பட் டுள்ளது. இப்பகுதியில் பாரிய கடல் அரிப்பு ஏற்பட்டு பொதுமக்களின் காணிகளும் கடல் அரிப் பில் உள்வாங்கப்பட்டது. இதன் பொருட்டு வீதி அமைக்க பறிக்கப்பட்ட கற்கள் கடல் வழியே போடப்பட்டு கடல் அரிப்பு தடுக்கப்பட்டுள்ளது.(21)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

(கோப்பாய்)

கோப்பாய் ஆசிரிய கலா சாலை வளாகத்தில் ஆசிரிய மாணவர்களால் டெங்கு ஒழிப்பு சிரமதானம் நடத்தப்பட்டுள்ளது. வளாகச் சுற்றாடலில் அதிகள வில் தேங்கிய குப்பைகள் மற் றும் செடிகள் என்பன சிரமதா னம் மூலம் அகற்றப் பட்டன.

குடாநாட்டில் டெங்கு நோயின தாக்கம் அதிகரித்து வருவதை அடுத்து சிரமதான ஏற்பாடு களும் திவிரப்படுத்தப்பட்டுள் ளன.

பாடசாலைகள் மற்றும் பொது இடங் கள் அரச தனியார் அலு வலகங்களிலும் இந்தச் சிர மதான நிகழ்வுகள் முன் னெடுக் கப்பட்டு வருகின்றனமை குறிப் பிடத்தக்கது. (வி)

# 1008 சங்காபிஷேகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இத்தியப்புலம் நாச்சிமார் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு 1008 சங்காபிஷேகம் இடம்பெறும்

தொடர்ந்து மகா கும்பா பிஷேக நூல் வெளியீடும், தொடர்ந்து மகேசுவர பூசையும் நடைபெறும். (வி)




நேற்று நடைபெற்ற யாழ். தொழில் திணைக்களத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அடிக்கல் நாட்டுவதற்கான பூர்வாங்க கிரியைகள் நடைபெறுவதை படத்தில் காணலாம். (படம் சுமித்தி)

# அமரர் பிரபாகரன் மென்பந்துத் தொடர் வல்லை அணி காலிறுதிக்குத் தகுதி

(தும்பளை)


அமரர் பிரபாகரன் ஞாபகார்த்த மென்பந்துக் கிரிக்கெட் தொடரில் சுப்பர் ஓவரில் வெற்றிபெற்ற வல்லை அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தினால் அமரர் இ. பிரபாகரன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும் 15 ஓவர்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் தொடர் விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்ற போட்டி ஒன்றில் வல்லை அணியும், நியூபவர் அணியும் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூபவர் அணி, நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் 97 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோபி 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ரொகான், சிவஞானம், திவாகர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய வல்லை அணி 15 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் திவாகர் 40 ஓட்டங்களைப் பெற்றார். இரு அணிகளும் ஓட்ட எண்ணிக்கையில் சம நிலை பெற்றமையால் சுப்பர் ஓவர் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதன் படி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று ஆடிய நியூபவர் அணி ஒரு ஓவரில் நான்கு ஓட் டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய வல்வை அணி ஐந்தாவது பந்தில் வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் காலிறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை வல்லை அணி பெற்றுக் கொண்டது. (62)



ஐயாத்துரை நினைவாக கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வெற்றிபெற்றது. இதில் ஆவரங்கால் மத்தி அணியை வீழ்த்தியே கிண்ணத்தை இந்து இளைஞர் அணி கைப்பற்றிக் கொண்டது.

# அலெக்சன் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று

(மட்டுவில்)

அமரர் அலெக்சன் நினைவு கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

கைதடி வடக்கு நவ சனசமூக நிலையமும், நவசக்தி விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் தென்மராட்சிப் பிரதேச மற்றும் யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடர் நவசக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஆறாம் திகதி நடைபெற்ற பிரதேச மட்ட அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும், மட்டுவில் மோகனதாஸ் 'ஏ' அணியும் மோதியது.

ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி மோகனதாஸ் 'ஏ' 3-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றுக் கொணடது.

பிரதேச மட்ட இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி அணியும், கைதடி மின்னொளி அணியும் மோதியது. இதில் மட்டுவில் வளர்மதி அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

யாழ். மாவட்டப் பிரிவில் நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் அச்சுவேலி ஸ்ரார் அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணியும் மோதின. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மாவட்ட மட்ட இரண்டாவது அரையிறுதிப் ஆவரங்கால் மத்தி அணியும், உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதின. இதில் உடுப்பிட்டி நவஜீவன் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

இன்று இரவு நடைபெறவுள்ள பிரதேச மட்ட இறுதிப் போட்டியில் மோகனதாஸ் 'ஏ' அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி அணியும், யாழ். மாவட்ட மட்டப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி அணியும் மோதவுள்ளன. (118)

# ஹொக்கி இறுதிப் போட்டிக்கு பல்கலைக்கழக அணியும் தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் விளையாட்டு அவையினர் நடத்தும் ஹொக்கித் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை யாழ். பல்கலைக்கழக அணியும் பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் மாவட்ட மட்டத்தில் இரண்டாவது ஆண்டாக நடத்தப்பட்டு வரும் ஹொக்கிச் சுற்றுப் போட்டி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியும், யாழ். பல்கலைக்கழக அணியும் மோதியது.

ஆரம்பம் முதலே சிறப்பான பந்துப் பரிமாற்றத்தையும், ஒருங்கிணைந்த ஆட்டத் திறனையும் வெளிப்படுத்தி வந்த யாழ். பல்கலைக்கழக அணி இறுதி வரை அதேவேகத்தில் ஆடியது. இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய பாலு மற்றும் கோபிநாத் ஆகியோர் அணியின் வெற்றிக்கு பெரும் பற்காற்றினர். இறுதியில் 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற யாழ். பல்கலைக்கழக அணி இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றது. இதில் பாலு நான்கு கோல்களையும், கோபிநாத் இரண்டு கோல்களையும் போட்டனர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கலைப்பீட மாணவன் பாலு தெரிவானர்.

இதேவேளை, ஸ்ரார் மற்றும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான மூன்றாமிடத்திற்கான ஆட்டம் வரும் திங்கட்கிழமை நடைபெறும் என்றும், இறுதிப் போட்டி குறித்த விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எப், எஸ்)

# பயணம்

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு முருகவேள் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஜே. மரிய கொறற்றி என்ற மாணவி தேசிய மட்ட மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்காக நேற்றைய தினம் கொழும்புக்குப் பயணமானார்.

மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றிய இவர் நான்காவது இடத்தைப் பிடித்தபோதிலும் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (30)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)


அகில இலங்கை மகளிர் சாரணியர்களின் வடபிராந்திய விளையாட்டுப் போட்டிக்கு பெண் சாரணியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

இப்போட்டிக்கு மாவட்ட மட்டத்தில் 20 பேர் தெரிவு செய்யப்பட்டு, மாகாண மட்டத்தில் பத்து பேர் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் போட்டி தொடங்குவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னரே மாகாண மட்டத்திற்கு தெரிவானவர்களின் விபரம் வெளியிடப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் உள்ள மூன்று சாரணியர்கள் தெரிவு செய்யப்பட்டு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தினூடாக, வடமாகாண பெண் சாரணியர் ஆணையாளர், 17/10, பிறவுன் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை யாழ். வலய கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எஸ்)

# மீண்டும் சுருண்டது இலங்கை அணி




(பல்லேகல)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இலங்கை அணி குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தது.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று பல்லேகல மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இலங்கை அணி, அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது மளமளவென விக்கெட்டுக்களை சமஇடைவெளியில் பறிகொடுத்து வந்தது. சங்கக்கார மற்றும் மத்தியூஸ் ஆகியோரே ஓரளவேனும் தாக்குப்பிடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை சற்று உயர்த்தினர். இலங்கை அணி அதன் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மத்தியூஸ் 58, சங்கக்கார 48 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிஸ் மூன்று, ஜோன்சன், ஹொப்லண்ட், லயன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடி வரும் அவுஸ்ரேலிய அணி, நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை விக்கெட் இழப்பின்றி 60 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் வட்சன் 36, ஹரிட் 23 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

போட்டியின் இரண்டாம் நாள் இன்றாகும்.

# விளையாட்டை மேம்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

கிரிக்கெட் தவிர்ந்த ஏனைய விளையாட்டுச் செயற்பாடுகளை அதிகரிக்கும் செயற்றிட்டமொன்றை கல்வி அமைச்சு முன்னெடுத்துள்ளது.

அம்பாந்தோட்டையில் எதிர்வரும் 2018ஆம் ஆண்டு நடாத்த முடிவெடுக்கப்பட்டிருக்கும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பெரும் எண்ணிக்கையான வீர, வீராங்கனைகளை உள்வாங்குவதற்கு இது பெரும் துணை புரியும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாடுகளை அதிகரிக்கும் செயற்றிட்டத்தை இலங்கை மத்திய கல்வி அமைச்சு முன்னெடுத்துள்ளது.

மத்திய கல்வி அமைச்சினால் இந்த வருடத்திலிருந்து 2018ஆம் ஆண்டு வரையான எட்டு வருட காலத்தில் இலங்கையில் சிறந்த விளையாட்டு வீர, வீராங்கனைகளை உருவாக்கும் முகமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதனொரு கட்டமாக இலங்கையிலுள்ள பிரபல்யமான 6 விளையாட்டுக்கள் தெரிவு செய்யப்பட்டு இதற்கான பயிற்றுவிப்பாளர்கள், கல்வி வலயங்கள் ரீதியாக பயிற்றுவிக்கப்பட்டு மாணவர்களுக்கு குறிப்பிட்ட பயிற்றுவிப்பாளர்கள் குறிப்பிட்ட விளையாட்டை மட்டும் பயிற்றுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது இலங்கையில் பிரபல்யமான விளையாட்டுக்களாக உள்ள வலைப்பந்தாட்டம், ஜிம்னாஸ்ரிக், கரப்பந்தாட்டம், மெய்வன்மை தடகள நிகழ்வுகள், ரக்பீ, கால்பந்தாட்டம் ஆகிய 6 விளையாட்டுப் போட்டிகளுக்கான பயிற்றுவிப்பாளர்கள் வலய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

# 12 சிறப்பு பரிசில்களை வெல்ல 300 வீராங்கனைகள் போட்டி

ஜேர்மனியில் 12 சிறப்புப் பரிசுகளை வெல்வதற்காக விலகல் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றில் 300 இற்கும் மேற்பட்ட பெண்கள் தீவிரமாகப் போட்டி யிட்டனர். கவர்ச்சி கலெண்டர் ஒன்றின் 12 பக்கங்களிலும் தோன்றுவதற்கான வாய்ப்பே இந்தப் பரிசாகும்.

இக்கால்பந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றிய அனைத்துப் பெண்களும் ஜேர்மனியில் உள்ள அமெச்சூர் கால்பந்தாட்டக் கழகங்களில் விளையாடும் வீராங்கனைகளாவர். இப்போட்டிகளில் இறுதியாகத் தெரிவுசெய்யப்பட்ட 12 வீராங்கனைகள் பிரேங்பர்ட்டில் உள்ள வோல்ஸ்பேங்க் அரங்கில் தமது திறமைகளைக் காண்பித் துள்ளனர்.

குறித்த கலண்டரானது மகளிர் கால் பந்தாட்டம் மீதான ஈர்ப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் அதிகமான ஊடகங்களையும் வரவழைப் பதற்கு உதவும் என இதன் ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.



கால்பந்தாட்ட வீராங்கனைகள் இப்போது தமது ஆண்கள் பாணி தோற்றத்தை கைவிடுகிறார்கள் என ஜேர்மன் தேசிய கால்பந்தாட்ட அணியின் வீராங்கனைகளில் ஒருவரான ஜூலியா சிமிக் கூறியுள்ளார். இவர் அண்மையில் தனது சகாக்களுடன் பிளேபோய் பத்திரிகைக்கு கவர்ச்சிப் போஸ்களைக் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. வீரர்களின் அர்ப்பணிப்பு இலங்கை வீரர்களிடம் இல்லை


## கவலை கொள்கிறார் ரணதுங்க

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவை விட இலங்கை வலுவாகக் காட்சி அளித்தாலும், அவுஸ்ரேலிய அணி வீரர்களின் அர்ப்பணிப்புணர்வு இலங்கை வீரர்களிடம் இல்லையென இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் கப்டன் மைக்கல் கிளார்க் பணம் கொழிக்கும் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இதுவரை விளையாடவில்லை. அவர் சர்வதேசப் போட்டிகளில் கவனம் செலுத்துவதற்காக ஐ.பி.எல். போட்டியில் ஆடுவதில்லை. பணத்தை விட கிரிக்கெட் மீது அவர் காட்டும் ஆர்வம் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

ஆனால் இலங்கை வீரர்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் போதுமான அளவுக்கு முழுக் கவனம் செலுத்துகிறார்களா என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது.



சில வீரர்களின் அர்ப்பணிப்புத் தன்மை எனக்கு மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. அவுஸ்ரேலியாவை விட இலங்கை வலுவாகத் தெரிகிறது. ஆனால் அவுஸ்ரேலிய வீரர்கள் இவர்களை விட முழு அர்ப்பணிப்புடன் விளையாடுகிறார்கள். அது மட்டுமின்றி இப்போது நிறைய கிரிக்கெட் வீரர்கள் பணத்துக்காக தேசிய அணியை தியாகம் செய்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.


# மழையால் ரத்து



(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் ஒன்பதாவது நாள் ஆட்டங்கள் அனைத்தும் கனமழை காரணமாக ரத்துச் செய்யப்பட்டன. ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றில் முன்னணி வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) கில்லஸ் முல்லர் (லக்சம்பர்க்) மோத விருந்த போட்டியை ஆவலுடன் எதிர் பார்த்துக் காத்திருந்த ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.

# துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக ஆடுகளம் இருந்ததால் வென்றோம்



(லண்டன்)


சில ஓவர்கள் கடந்த பின்னர், ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக இருந்தது. எனவே இந்த ஓட்ட எண்ணிக்கை எட்டக்கூடியது தான் என்று நான் நினைத்தேன். நாங்கள் வெற்றிபெற்றதன் மூலம் அது நிரூபணமாகியுள்ளதென இங்கிலாந்து அணித் தலைவர் குக் தெரிவித்தார்.

நான் விளையாடிய சிறந்த ஆடுகளங்களில் இதுவும் ஒன்று. எல்லோரும் இங்கு பந்து அதிகமாக பவுன்ஸ் ஆகும் என்று சொன்னார்கள். ஆனால் துடுப்பாட்டம் செய்வதற்கு ஏதுவாக பந்து வந்தது. குறிப்பாக மின்னொளியில் சிரமமின்றி ஓட்டங்கள் எடுக்க முடிந்தது. இது போன்ற சூழலில் களத்தடுப்புச் செய்வது கடினம். ஆனால் இதுவும் எங்களுக்குச் சிறப்பாக அமைந்தது. எனது ஆட்டத் திறன் திருப்தி அளிக்கிறது. இதே போல் தொடர்ந்து சிறப்பாக விளையாடுவேன் என்று நம்புகிறேன்.

ஒரு நாள் போட்டித் தரவரிசையிலும் முதல் இடத்தைப் பிடிப்பது தான் எங்களது இலக்கு. இப்போது தரவரிசையில் 5ஆவது இடத்தில் இருக்கிறோம். எங்களிடம் நிறைய திறமைகள் உள்ளன. ஆனாலும் முதல் நிலை இலக்கை எட்ட இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டி உள்ளது. அதற்காக இன்னும் கடினமாக உழைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# பந்து வீச்சில் முன்னேற்றம் தேவை இல்லையேல் வெற்றிபெறுவது கடினம்

(லண்டன்)



முதல் 5 ஓவர்களில் எங்களது முயற்சி எதுவுமே கைகொடுக்கவில்லை. பந்து வீச்சுத் துறையில் முன்னேற்றம் இல்லையெனில் வெற்றி பெறுவது கடினமானதாகும் என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.

190 ஓட்டங்களைப் பெற்றதால் இந்த ஆட்டத்தில் நாங்கள் நன்றாக துடுப்பாட்டம் செய்ததாகவே நினைக்கிறோம். எப்போதுமே பவர்-பிளேயில் எதிரணியின் ஓட்டங்களைக் கட்டுப்படுத்துவது முக்கியம். பிரவீன்குமார், வினய்குமார் ஆகியோரின் தொடக்க ஓவர்களில் இங்கிலாந்து எளிதாக ஓட்டங்களைச் சேர்த்தது. இதனால் சுழற்பந்து வீச்சு மூலம் கட்டுப்படுத்தலாம் என்று நினைத்து, அஸ்வினுக்கு வாய்ப்பு வழங்கினேன். ஆனால் அவரது பந்திலும் கூட நிறைய ஓட்டங்கள் சென்றன.

பந்து ஈரப்பதம் ஆன பிறகு அதன் மூலம் துல்லியமாக பந்து வீசுவது கடினம். அணியில் இப்போதுள்ள வேகப்பந்து வீச்சாளர்களில், அதி வேகமாகப் பந்து வீசக்கூடியவர்கள் யாரும் இல்லை. மணிக்கு 128 முதல் 132 கிலோ மீற்றர் வேகத்தில் வீசுகிறார்கள்.

அவர்கள் பந்து நன்கு ஸ்விங் ஆகும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், ஈரப்பதமான இந்த ஆடுகளத்தில் பந்து ஸ்விங் ஆகவில்லை. அதே சமயம் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஓட்டங்களைக் குவிக்க சுலபமாக இருந்தது என்றும் தெரிவித்தார்.

# கூகுளில் அதிகம் தேடப்படும் பெக்காம் தம்பதிகளின் மகள்



(லண்டன்)

இங்கிலாந்தில் இப்போது கூகுளில் அதிகம் தேடப்படும் பிரபலம் ஹார்பர் செவன்தான். யார் இந்த ஹார்பர் செவன்? கால்பந்து நட்சத்திரம் டேவிட் பெக்காம் விக்டோரியா தம்பதியின் மகள்தான் இவர்.

பெக்காமைப் போல அவரது மனைவியும் பிரபலம்தான். பொப் பாடகியான விக்டோரியாவுக்கு என்று தனி ரசிகர் கூட்டம் இருக்கிறது. பெக்காமுக்கும் ஏராளமான ரசிகர்கள் இருக்கிறார்கள்.

ஆனாலும் தனது பெற்றோரையும் தாண்டி அதிகமாகத் தேடப்பட்டவர் என்ற பெருமைக்கு உரியவராகியிருக்கிறார் ஹார்பர்.

இந்தப் பட்டியலில் இங்கிலாந்தின் முன்னணிப் பெண் தொழிலதிபர் ஹிலாரி டேவி, ஸ்பெயின் ரென்னிஸ் வீரர் பெலிசியானோ லோபஸ் ஆகியோரையே முந்தியிருக்கிறார் ஹார்பர்.

சரி பெக்காம் எத்தனையாவது இடத்தில் வருகிறார் என்று கேட்கிறீர்களா? அவர் ஐந்தாவது, மனைவி விக்டோரியாவுக்கு பத்தாமிடம்.


# முன்னாள் வீரர்கள் கௌரவிப்பு

(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபை முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான்களை கௌரவிக்கும் வகையில் ஹால் ஒப் பேம் என்ற பட்டியலில் இணைக்கிறது. புகழ் பெற்றவர்கள் இடம் பெறும் இந்தப் பட்டியலில் இதுவரை 64 வீரர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில் வருகிற 12ஆம் திகதி லண்டனில் நடக்கும் ஐ.சி.சி. விருது வழங்கும் விழாவில் மேலும் 4 முன்னாள் வீரர்களை ஹால் ஒப் பேம் பட்டியலில் அங்கீகரிக்க ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது. அந்த வீரர்களின் பெயரை அன்றைய விழாவில் ஐ.சி.சி. தலைவர் சரத்பவார் அறிவிக்கிறார்.

# விறுவிறுப்பான முதலாவது ஒருநாள் போட்டி; ஐந்து ஓட்டங்களால் பாகிஸ்தான் வெற்றி




(புலவாயோ)

பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 247 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யுனிஸ் கான் 78, மிஸ்பா உல் ஹக் 54, உமர் அக்மல் 38 ஓட்டங்களைப் பெற்றனர். பிறைஸ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே வெற்றிபெற கடுமையாக போராடியும் 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது. அவ்வணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 242 ஓட்டங்களையே பெற்றது. ரெய்லர் 84 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்டநாயகனாக யுனிஸ்கான் தெரிவு செய்யப்பட்டார்.

# கிரிக்கெட்டுடனான உறவை துண்டித்தார் இன்ஸமாம்



(லாகூர்)


கிரிக்கெட்டிற்கும் எனக்கும் தற்போது எதுவித தொடர்பும் இல்லை. அதன் மீதான ஆர்வம் எனக்குத் தற்போது மங்கிவிட்டது என்று பாகிஸ்தான் முன்னாள் தலைவர் இன்ஸமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

நான் இப்போது கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கிரிக்கெட் சபையுடன் எந்த வித தொடர்பும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. நான் பாகிஸ்தான் கிரிக்கெட்டிற்கு ஏற்கனவே சேவையாற்றியுள்ளேன்.

பாகிஸ்தான் அணி இப்போது என்ன செய்கிறது? எந்தப் போட்டியில் விளையாடுகிறது? என்பது பற்றி அறிய எனக்கு ஆர்வம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் என்ற கூட்டமைப்பின் குற்றச்சாட்டில் உண்மை இல்லை

## அமைச்சர் பஸில் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலவந்தமான முறையில் தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதன் மூலம் நாடாளுமன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிழையாக வழிநடத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கிலிருந்து சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் விடுதலைப் புலிகளே பலவந்தமாக வெளியேற்றினர் என்பதனை கூட்டமைப்பினர் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களை மீளவும் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு அரசாங்கம் வழியமைத்துக் கொடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் சுமத்திய குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பசில் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ஆதிவாசிகள் இனத்தை சேர்ந்தவராம் பிள்ளையான்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தமது பிறப்பத்தாட்சிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டையிலுள்ள "தமிழ்" இனம் என்பதை மாற்றும்படி கோரிக்கை விடுத்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த நாட்களில் தலனே எனும் ஆதிவாசிகளுக்கான தலைமை அலுவலகத்தை அமைத்ததோடு அவ் ஆதிவாசிகளையும் சந்தித்து சிவனேசதுரை சந்திரகாந்தன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மேலும் தலனே எனும் ஆதிவாசிகள் குழுவின் தலைவர் வன்னிலத்தோ வுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தான் தமிழ் இனத்தைச் சேர்ந்தவரல்ல.

தான் ஆதிவாசிகள் இனத்தை சேர்ந்தவர் என சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும் அப் பத்திரிகை தெரிவித்தது.

இதற்கிணங்க தான் ஆதிவாசிகளின் இனத்தினர் என்பதால் அதற்கேற்ற வகையில் தனது பிறப்பத்தாட்சிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

# இலங்கை மீதான ஐ.நா அழுத்தங்களை முறியடிப்பதற்கு சீனா உதவியளிக்க உறுதி

(கொழும்பு)

**ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை மீது கொடுக்கப்படும் அழுத்தங்களை முறிபடிக்க உதவி வழங்குவதாக சீனா உறுதியளித்துள்ளது.**

புலிகளுக்கு எதிரான போரின்போது இடம்பெற்ற மனிதாபிமானக் குற்றங்கள் தொடர்பாக நம்பகமான அனைத்துலக விசாரணை நடத்த வேண்டும் என்று ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை மீது அழுத்தங்கள் கொடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் இறையாண்மையை பாதுகாப்பதற்கு சீனா உதவி வழங்கும் என்று சீன உயர் தலைவர் வூ பங்குவோ உறுதியளித்துள்ளார்.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் டி.எம்.ஜெயரட்னவை சந்தித்துப் பேசிய போதே, அவர் இவ்வாறு உறுதிமொழி வழங்கியுள்ளார்.

தேசிய சுதந்திரம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு சீனா தொடர்ந்து ஆதரவளிக்கும்.



இலங்கையின் அபிவிருத்திப் பாதை மற்றும் அதன் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளையும் சீனா மதிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# இந்திய - இலங்கை கடற்படை அதிகாரிகள் இரு நாட்டு உறவை வலுப்படுத்த பேச்சு



(கொழும்பு)

இந்திய - இலங்கை கடற்படை அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்கள் கொழும்பில் ஆரம்பமாகியுள்ளன. இலங்கை கடற்படைத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள் இன்று வரை தொடர்ந்து நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது மற்றும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து இந்தப் பேச்சுக்களின் போது ஆராயப்படுவதாக கடற்படை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியக் கடற்படையின் வெளிநாட்டு உறவுகளுக்கான பிரிவின் உதவித் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் முருகேசன் தலைமையில் ஆறு பேர் கொண்ட குழு இந்தப் பேச்சுக்களில் பங்கேற்க கொழும்பு வந்துள்ளது.

இலங்கை கடற்படையின் நடவடிக்கைகள் பணிப்பாளர் றியர் அட்மிரல் ஜெயந்த பெரேரா தலைமையிலான குழுவினருடன் இவர்கள் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

இரு நாட்டுக் கடற்படைகளுக்கும் இடையில் நடவடிக்கை, பயிற்சி, விநியோகம், தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் ஒத்துழைப்புகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்படுவதாக இலங்கை கடற்படை தகவல் வெளியிட்டுள்ளது.

பாக்கு நீரிணையில் சட்டவிரோதக் கடத்தல்கள், ஆயுத மற்றும் ஆட்கடத்தல்களை தடுப்பது குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் இலங்கை கடற்படை வட்டாரங்கள் கூறியுள்ளன.



சேர்பிய ஜனாதிபதி போரிஸ் ரடிக் உடன், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இருநாடுகளுக்கிடையிலான நல்லுறவுகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதைக் காணலாம்.

# புலிகளுடன் இணைந்து செயற்பட்டாரென்ற சிங்கள இளைஞர் மீதான குற்றச்சாட்டு வாபஸ்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தராகச் செயற்பட்டார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்டிருந்த பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த ஒருவர் மீதான குற்றச்சாட்டை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளார்.

லலித் செனவிரட்ண என்ற இந்த இளைஞர், இராணுவம் ஒன்றை அமைத்து, சட்டபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உதவியிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மே 2 ஆம் திகதி இந்த வழக்கு முதலில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதும், இவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள லலித் பிரியங்காரா, நிஹால் செனவிரட்ண ஆகியோருக்கு எதிராகவும் இதேபோன்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை விடுதலை செய்வது தொடர்பான தீர்ப்பை எதிர்வரும் 17 ஆம் திகதி நீதவான் அறிவிப்பார்.

# சந்தேக நபர்களை தடுத்துவைக்க இருநாள் அவகாசம் கோரும் அரசு

(கொழும்பு)

கைது செய்யப்படும் சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் வரையில் தடுத்து வைப்பதற்கு அரசாங்கம் அனுமதி கோரவுள்ளது.

தற்போது அமுலில் உள்ள சாதாரண சட்டத்தின் கீழ் காவல்துறையினரால் கைது செய்யப்படும் சந்தேக நபர்களை 24 மணித்தியாலங்களுக்கு மேல் நீதிமன்றில் ஆஜர்படுத்தாமல் தடுத்து வைக்க முடியாது.

இந்தக் கால அவகாசத்தை 48 மணித்தியாலங்கள் வரையில் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. சட்டத்திருத்தம் குறித்த பிரேரணை நாடாளுமன்றில் முன்வைக்கப்பட உள்ளது.

விசாரணைகளை நடத்துவதற்கு 24 மணித்தியாலங்கள் போதுமானதல்ல என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோரை அடக்கு முறைக்கு உட்படுத்த அரசாங்கம் இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன

கொழும்பு கல்வி வலயம்


# க.பொ.த. சா/த பரீட்சை - 2011



நேரம்: 1 மணித்தியாலம்

# கல்வி முரசு O/L

## தமிழ்மொழியும் இலக்கியமும் - பகுதி I



யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. குடிபுறங் காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் வடு அன்று. வடு என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
   1. தொழில் 2. காயம் 3. பழி 4. துன்பம்
02. மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம் கந்தம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
   1. வாசனை 2. இதழ் 3. சிறியது 4. அழகு
03. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு, மிடுக்கு என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
   1. வறுமை 2. செருக்கு 3. செல்வம் 4. வலிமை
04. கனிந்த பழங்களின் மனிதர் உணரா இனிமை இரகசியத்தைப் பரிமாறும் காக்கைகள். இரகசியம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
   1. அந்தகாரம் 2. பரிகாசம் 3. பரகசியம் 4. அந்தரங்கம்
05. தருமலிங்கத்திற்கு, அவன் மகன் நடந்து சென்ற விதம் நம்பிக்கை தந்தது. நம்பிக்கை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
   1. அவநம்பிக்கை 2. அதி நம்பிக்கை
   3. அவமரியாதை 4. உதாசீனம்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. இரு பொருள் அமையத் தொடுப்பது.
   1. இணை மொழி 2. இரட்டைக் கிளவி
   3. சிலேடை 4. மடக்கு
07. வானவூர்தி செலுத்துபவனைக் குறிக்குஞ் சொல்,
   1. மீகாமன் 2. வலவன் 3. சாரதி 4. பாகன்
08. உலக நாடுகளில் இலங்கையின் தைக்கப்பட்ட ஆடைகளுக்கு நல்ல டிமாண்ட் உள்ளது. டிமாண்ட் என்பதற்கு வழங்கப்படும் தமிழ்க் கலைச்சொல்,
   1. பெறுமதி 2. ஆர்வம் 3. விண்ணப்பம் 4. கேள்வி
09. கழுத்து, ஆபத்து, நிலப்பெரும் பிரிவு எனும் பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்.
   1. தாலம் 2. கண்டம் 3. பார் 4. வளை
10. முதுமைக் காலத் தேவைகளுக்கா சேமித்து வைக்கப்படும் பொருள்,
   1. சால்பு 2. ஏய்ப்பில் வைப்பு 3. ஓம்படை 4. அவிசு
11. வழிமேல் விழி வைத்து என்ற அருஞ்சொற்றொடரினால் குறிக்கப்படுவது.
   1. முயற்சி 2. ஏமாற்றம் 3. எதிர்பார்ப்பு 4. வெற்றி
12. வடசொல்லாக அமையும் சொல்
   1. அலட்சியம் 2. அலுமாரி 3. உலாந்தா 4. கலண்டர்
13. பிள்ளை என்பதை இளமைப் பெயராகக் கொண்டவை
   1. கிளி, மீன் 2. கழுகு, கீரி
   3. தவளை,தென்னை 4. குருவி, கிளி
14. கத்தும் என்ற தொனியைக் கொண்டவை
   1. வண்டு, பூனை 2. கரடி, ஆந்தை
   3. பசு, காகம் 4. தவளை, கரடி
15. அசூயை என்ற வடமொழிச் சொல்லின் பொருள்
   1. புதுமை 2. கருத்து 3. பொறாமை 4. மறைவு
16. "வயிறு கடித்தல்" என்ற மரபுத் தொடருக்கு ஒப்பான மற்றொரு மரபுத் தொடர்.
   1. வயிறு குளிர்தல் 2. வயிற்றைக் கலக்குதல்
   3. வயிறு வளர்த்தல் 4. வயிறு கிள்ளுதல்
17. வாக்குறுதி ஒன்றைக் கொடுத்துவிட்டுப் பின்னர் அதை நிறைவேற்றத் தவறுதல் என்னும் கருத்தைத் தரும் மரபுச்சொல்.
   1. நாக்கு அடைத்தல் 2. நாக்குப் புரளுதல்
   3. நாக்கு வளைத்தல் 4. நாக்கு வாங்குதல்
18. மிகக் குறைவு என்ற கருத்தைத் தரும் தொடர்
   1. அரைகுறை 2. கங்கு கரை 3. அற்பசொற்பம் 4. குறை குற்றம்
19. ஒருவன் செய்யும் தீமைகள் அவனையே வந்துசாரும் என்ற கருத்தைத் தெரிவிக்காத பழமொழி.
   1. கெடுவான் கேடு நினைப்பான்
   2. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
   3. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்
   4. தன்வினை தன்னைச் சுடும்
20. கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா? என்ற பழமொழியின் கருத்து.
   1. கரும்பு சாப்பிடக் கூலிகொடுக்க வேண்டியதில்லை
   2. நல்ல உணவுப் பொருள்களைப் பணமின்றிப் பெற முடியாது
   3. உண்ண உண்ணத் தெவிட்டாத பொருள் கரும்பு
   4. விருப்பத்துக்குரிய ஒரு கருமத்தைச் செய்வதற்குத் தூண்டுதல் தேவையில்லை

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. தமிழ்நெடுங் கணக்கு ஒழுங்கில் அமைந்த எழுத்துக் கூட்டம்,
   1. ஞ,ந,ல,ர 2. த,ய,வ,ள 3. க,ட,வ,ர 4.ச,ம,ப,ற
22. பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயராக வருவது,
   1. கொடை 2. மரம் 3. வானொலி 4. போதல்
23. "கூலி வேலை செய்தான்" இவ்வாக்கியத்தில் கூலி வேலை என்பது?
   1. இரண்டாம் வேற்றுமைத் தொகை
   2. மூன்றாம் வேற்றுமைத் தொகை
   3. நான்காம் வேற்றுமைத் தொகை
   4. ஏழாம் வேற்றுமைத் தொகை
24. சந்தி பிரிக்கும் வகையால் இரு வேறு பொருள் கொள்ளத்தக்க ஒரு புணர் மொழி,
   1. பொருணயம் 2. வெண்டாமரை 3. பொன்னன்று 4. மன்றாடி
25. "தாயோடறு சுவை போம்" இவ்வாக்கியத்தில் அறுசுவை என்பது.
   1. வினைத் தொகை 2. பண்புத் தொகை
   3. உவமைத் தொகை 4. உம்மைத் தொகை
26. இன்று பரீட்சை என்று மாணவர் நினைத்தனர். இவ்வாக்கியத்தில் உள்ள இடைச்சொல்,
   1. இன்று 2. என்று 3. மாணவர் 4. நினைத்தனர்
27. "நல்லன்" என்பது,
   1. தெரிநிலைவினை 2. வினையாலணையும் பெயர்
   3. குறிப்பு வினைமுற்று 4. தொழிற்பெயர்
28. பெயராகவும் வினையாகவும் வழங்கும் ஒரு சொல்,
   1. பாய் 2. உண் 3. தாய் 4. சித்திரி
29. பின்வருவனவற்றுள் எழுவாய் மறைந்து நிற்கும் வாக்கியம் எது?
   1. தருமம் தலை காக்கும்
   2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
   3. சிறு துரும்பும் பல் குத்த உதவும்
   4. துறவிக்கு வேந்தன் துரும்பு
30. எண் அடையை ஏற்றுவந்த பெயர்ச் சொல்
   1. சிறிய கண்கள் 2. எந்தப் புத்தகம்
   3. மூன்று முகம் 4. சதுரப் பெட்டி

**பின்வரும் வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

31. அறிவியல் வளர்ந்துள்ள போதிலும் உலகில் மகிழ்ச்சியைக்,
   1. காணலாம் 2. காணக்கூடும்
   3. காணலாமாம் 4. காணமுடியவில்லை
32. மக்கள் தாம் தாம் செய்த கருமங்களின் பயனை,
   1. அவரவரே அனுபவிப்பர்
   2. அவர்கள் ஒவ்வொருவரும் அனுபவிப்பர்
   3. தாமே அனுபவிப்பர்
   4. தனித்தனியே அனுபவிப்பர்
33. நோயால் மட்டுமன்றிப்,
   1. பசி கொண்டு வருந்தினான் 2. பசியால் வருந்தினான்
   3. பசித்து வருந்தினான் 4. பசியாலும் வருந்தினான்

**பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.**

34. மக்களின் வாழ்நாள் சில, ஆனால் கல்வியோ கரையில்லாதது. ஆதலின் எல்லா நூல்களையும் கற்கவியலாது, உறுதிப்பொருள்களை உணர்த்தும் நூல்களையே கற்றல் வேண்டும்.
   1. மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் கல்வி கற்க வேண்டும்
   2. கரையில்லாத கல்வியைக் கற்க முடியும்
   3. மனிதன் தனது வாழ்நாளில் உறுதிப் பொருள்களை உணர்த்தும் நூல்களையே கற்றல் வேண்டும்.
   4. மனிதன் தனது வாழ்நாளில் எல்லா நூல்களையும் கற்ற வேண்டும்
35. விஞ்ஞானம் மனிதனது சிந்தனை ஆற்றலை வளர்க்கிறது. மனிதனை மனிதப் பண்புள்ளவனாக்குவது இலக்கியக் கல்வியே. மூளையும் உளமும் ஒன்றுசேர வளர்ச்சியடையும் போதே மனிதன் முழு மனிதனாகின்றான்.
   1. விஞ்ஞானமும் இலக்கியக் கல்வியும் மனிதனை முழுமனிதனாக்குகின்றன
   2. மூளையும் உளமும் வளர்ச்சியடைய விஞ்ஞானம் அவசியமானது
   3. முழு மனிதனாவதற்கு சிந்தனை ஆற்றல் அவசியம்
   4. மனிதன் முழுமனிதனாவதற்கு இலக்கியக் கல்வி போதுமானது

**எழுத்துப் பிழைகளற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

36. 1) விருந்தோம்புதல் என்பது எங்கும் பரவியுள்ள பளக்கம்
   2) விருந்தோம்புதல் என்பது எங்கும் பறவியுள்ள பழக்கம்
   3) விருந்தோம்புதல் என்பது எங்கும் பரவியுல்ல பழக்கம்
   4) விருந்தோம்புதல் என்பது எங்கும் பரவியுள்ள பழக்கம்
37. 1) காய்ந்த மரத்திற்குக் கல்லெரி விழும்
   2) காய்ந்த மரத்திற்குக் கல்லெறி விழும்
   3) காய்ந்த மரத்திற்குக் கல்லெறி விளும்
   4) காய்ந்த மரத்திற்குக் கல்லெரி விளும்

**புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

38. வெளிநாட்டிலிருந்து பொருளை இறக்குமதி செய்யும்போது துறைமுகத்தில் அதன் மேல் விதிக்கப்படுவது.................................எனப்படும்.
   1. வாடகை 2. சுங்கவரி 3. கட்டணம் 4. செலவாணி
39. வரவு செலவுத்திட்ட..................நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
   1. கணக்கு 2. ஏடு 3. அறிக்கை 4. மனு

**கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40. அ) திருக்குறள் அவை எல்லாவற்றுள்ளும் தலைசிறந்தது
   ஆ) அத்துடன் அவை மக்களுக்கு உறுதிதருவதால் அறத்தினைப் போதிப்பன
   இ) ஏனெனில் குறளில் கூறப்பட்ட நீதி மொழிகள் எல்லாச் சமூகத்தவருக்கும் பொதுவானவையாகும்.
   ஈ) தமிழிலே பல நீதி நூல்கள் உள்ளன.
   உ) அதனை உலகப்பொது நூல் எனச் சிறப்பித்துக் கூறுவர்
   1. அ,உ,ஈ,இ,ஆ 2. ஈ,அ,உ,இ,ஆ
   3. ஈ,உ,அ,ஆ,இ 4. ஈ,அ,உ,ஆ,இ

# தமிழ்மொழியும் இலக்கியமும் - பகுதி II

நேரம் : 2 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. சுருக்கமான விடை தருக.

i) வில்லுப்பாட்டு சுவையானதாக அமைவதற்கு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.
ii) என்னடி ஆயா அதிசயமா இருக்கு என்ன இந்தப்பக்கமா காத்து வீசுது- இவ்வாக்கியத்தை உரிய நிறுத்தற் குறியீட்டைப் பயன்படுத்தி எழுதுக.
iii) “அழகாய் கவிதையெழுதிக் கொடுத்தன வண்ணத்துப் பூச்சிகள்” இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளை எழுதுக.
iv) அறிக்கை எழுதப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
v) “ஊர்” இச்சொல் பெயராகவும் வினையாகவும் பொருள் தரும் வகையில் வாக்கியம் எழுதுக.
vi) “அரசுறை கோயி லணியார் ஞெகிழும்” இத்தொடரைப் பிரித்து எழுதுக.
vii) ஆறாம் வேற்றுமை சொல்லுருபை வைத்து வாக்கியம் எழுதுக.
viii) கட்டுரை எழுதும் போது தவிர்க்க வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.
ix) சிறுகதையின் பண்புகள் இரண்டு தருக.
x) விளம்பரம் ஒன்றினைத் தயாரிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ) மாணவர்கள் இன்று பல்வேறு பொழுதுபோக்குகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் வாசிப்புக்காக மாணவர்கள் ஒதுக்கும் நேரம் குறைவானது எனப் பல்வேறு தரப்பினராலும் குற்றம் சுமத்தப்படுகின்றது. வாசிப்பின் முக்கியத்துவம், இன்று மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் குன்றியமைக்கான காரணங்கள், வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஒரு விளக்கக் கட்டுரை.

ஆ) இளம் பராயத்தினர் சமுதாயத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து வருகின்றனர். பிரச்சினைகளை வெற்றிகொள்ளத் தெரியாதவர்கள் விரக்தியின் விளிம்பிற்குச் சென்று விடுவதோடு, சிலர் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதற்குக் காரணம் இன்றைய இளம் பராயத்தினருக்குப் பொருந்தாத கல்வியே பாடசாலைகளில் வழங்கப்படுகின்றன என்று கூறும் ஒருவருக்கும், அதனை மறுக்கும் இன்னொருவருக்கும் இடையிலான உரையாடல்.

இ) அந்நியர் ஆட்சியினால் அடிமை இருளிலும், ஆங்கில மோகத்திலும், அறியாமையிலும் ஆழ்ந்திருந்த மக்களைத் தனது பாடல்கள் மூலம் சிந்திக்கத் தூண்டித் துயிலெழுப்பியவர் பாரதியார். அவர் மீண்டும் பூமிக்கு வந்து தற்போதைய சமூகநிலை, பெண்கள் கல்வி, சாதிப்பிரிவு, அரசியல் சுதந்திரத்தின் பயன்கள் பற்றி அவர் அடைகின்ற பெருமிதம், வேதனைகளை உம்மிடம் பகிர்ந்து கொண்டால்....(கற்பனைக் கட்டுரை)

ஈ) ஏழைக் குடும்பத்தில் பிறந்த வரதன் பிறக்கும்போது தாயையும், தனது இரண்டாவது வயதிலே தந்தையையும் இழந்து விடுகின்றான். பத்து வயது நிரம்பிய அவனுடைய அண்ணனான சாந்தன் கஷ்ரப்பட்டாவது தனது தம்பியை கல்வி கற்கவைத்து வாழ்க்கையில் முன்னேற்ற வேண்டுமென எண்ணுகிறான்.... இதனைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வுகளை உள்ளடக்கிய ஒரு சிறு கதை.

**03. தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 30-35 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.**

மனிதர் ஒருவருக்கொருவர் தம் கருத்தை வெளியிட்டுக்கொள்ளும் கருவியே மொழி எனப்படும். உலகிலுள்ள எண்ணற்ற மொழிகளுள் காலத்தால் பழமை வாய்ந்த மொழிகள் சிலவே. அவற்றுள்ளும் இலக்கியச் செழுமை மிகுந்துள்ள மொழிகள் மிகச் சிலவே. இத்தகைய சிறப்பு வாய்ந்த மொழிகளுள் தமிழும் ஒன்று.

தமிழ் என்னும் சொல்லுக்கு “இனிமை” என்பது பொருள். தமிழ் மிகவும் இனிமையுடைய மொழி. திருந்திய இலக்கண அமைதி நிரம்பிய மொழி. ஆகவே இதனை உயர்தனிச் செம்மொழி என்பர். “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்” என்று பாரதியார் தமிழ் மொழியின் இனிமையைப் பாராட்டிக் கூறியுள்ளார்.

தமிழ் மொழி மூவேந்தராலும் வளர்க்கப்பட்டது. எனினும் தமிழைப் போற்றி வளர்த்த பெருமை பாண்டிய மன்னருக்கே உரியது. பாண்டிய மன்னர்கள் தமிழ்ச் சங்கம் அமைத்துப் புலவர் பலரை ஒருங்கு கூட்டித் தமிழை வளர்த்தனர். தமிழ்ச் சங்கம், முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முப்பிரிவாய் அமைந்திருந்தது. கடைச்சங்கம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

**04. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறிருக்கும் இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்ற வொளிமுகம்
புன்னகையின் புது நிலவும் போற்ற வருந்தோற்றம்
தூங்காமணி மின் போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்
அங்கதனிற் கண்விழித்தேன் அடடாவோ! அடடா!
அழகென்னுந் தெய்வந்தான் அதுவென்றேயறிந்தேன்

i) இங்கு இளமங்கை எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
ii) கவிஞர் இக்கவிதையினூடாகக் கூறிவந்த கருத்து யாது?
iii) இப்பாடலில் உள்ள உவமை அணி ஒன்றைக் குறிப்பிட்டு விளக்குக.
iv) “தூங்காதே” என்ற தொடர் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
v) இப்பாடலை எழுதியவர் யார்?

**05. அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட உணவுப் பொருட்களை அகதி முகாமில் மக்களுக்கு எவ்வாறு பகிர்ந்தளித்தீர் என்பது பற்றி நிறுவனத் தலைவருக்குச் சமர்ப்பிப்பதற்கு ஓர் அறிக்கை.**

# தமிழ்மொழியும் இலக்கியமும் - பகுதி III

நேரம் : 2 மணித்தியாலம்

**1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**

01. சுருக்கமான விடை தருக.

i) நல்வழியில் பசி வந்திடப் பறந்துபோகும் பத்து எனக் குறிப்பிடப்பட்டவை எவை?

ii) “மன்னிக்க வேண்டும் ஐயா எனக்கு ஒருநாள் அவசர லீவு வேண்டும்” இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

iii) “குடிபுறங் காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் வடு அன்று வேந்தன் தொழில்” இக் குறளின் பொருளை எழுதுக.

iv) “அஞ்சுமஞ் சுங்கய லஞ்சுமஞ் சுங்கட லஞ்சுமஞ்சும்” இத் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

v) முன்னோக்கு என்ற கவிதையின் ஆசிரியர் யார்?

vi) நல்ல மரம் - நச்சுமரம் எவற்றிக்கு உவமிக்கப்பட்டுள்ளது?

vii) “கூழுங் குடியும் ஒருங்கு இழக்கும் கோல் கோடிக் குழாது செய்யும் அரசு” இதனைக் கொண்டு கூட்டி எழுதுக.

viii) “மங்கையர்க்கரசியின் காதல்” என்ற கதையில் பேசப்படும் பாத்திரங்கள் எவை?

ix) “என்னப்பா, ரெண்டு பேருமா என்ன பேசிக்கிட்டிருக்கீங்க கோட்டையைப் பிடிக்கப்போறவங்க மாதிரி” இக் கூற்றைத் திருந்திய வடிவத்தில் எழுதுக.

x) “விடியுமா” என்ற சிறுகதையில் தந்தியில் வந்த செய்தி யாது?

**02. பின்வரும் செய்யுட்பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் காணப்படும் சிறப்பை விளக்குக.**

அ) பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டுக்
கரந்து மறைக்கலும் ஆமோ? - நிரந்தெழுந்து
வேயின் திரண்ட தோள் வேல்கண்ணாய் விண் இயங்கும்
ஞாயிற்றைக் கைம் மறைபார் இல்.

ஆ) நிலவாய் விளங்குதலா னீள்வான் படிந்து
சில போ துலாவுதலாற் சென்று - தலைமேல்
உதித்து வரலா லுயர் மா மலையை
மதிக்கு நிகராக வழுத்து.

இ) மங்கையர் திலகமே! உன் பேரிலுள்ள சொல் லொணாக் காதல் என்னைத் தூண்ட, நான் அவனைத் தனி வழியில் மறித்து இவ்வாளால் வீர சுவர்க்கம் அனுப்பி விட்டேன். வாளுக்கு இரையாகி விட்டவனை இனி நினைத்து சாம்பாதே. நின் கயல் போன்ற கண்ணால் கண்ணீர் விடுவது எனக்குச் சகிக்கவில்லை! கருணாகரன் சௌரியத்தில் மோகித்துப் போயிருந்தாய். அவனைத் தனிப் போரில் வென்ற என் வீரத்தைப் பார்.

ஈ) இளந்தென்றல் எழுந்து வந்தது. அம்மெல்லிய பூங்காற்றின் இனிமையால் புத்துயிர் பெற்ற நண்பர்கள், அகமும் முகமும் மலர்ந்து தென்றல் எழுந்து வந்த திசை நோக்கிச் சென்றார்கள். அவ்வழியில், இளந்திரைகளோடு இலங்கிய நன்னீர்ப் பொய்கையொன்று அமைந்திருந்தது. அப்பொய்கையில் விளங்கிய செந்தாமரையில் அன்னங்கள் அமர்ந்து துயின்ற அழகு கண்ணைக் கவர்ந்தது.

03. கவிதைகள் என்ற பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு,
அ) “நிழலின் நினைவு” என்ற கவிதையில் கவிஞர் கூற முற்படும் விடயம் யாது?
ஆ) அதனைக் கவிஞர் விளக்குமாற்றை ஆராய்க.

அல்லது

“நாட்டார் பாடல்கள்” என்ற பாடல் பகுதியை அடிப்படையாகக் கொண்டு,
அ) “மீன்பிடிகாரர் பாடல்” பகுதியில் கூறப்பட்ட முக்கிய கருத்துக்களை உமது நடையில் எழுதுக.
ஆ) மீன்பிடித் தொழிலின் சிறப்பு எவ்வாறு கூறப்படுகின்றது.

04. “நல்ல மரமும் நச்சுமரமும்” என்ற பாடத்தில் அறிஞரிடம் அமைந்த செல்வத்தின் சிறப்பு பற்றிக் கூறப்பட்டவற்றை திருக்குறள்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

அல்லது

“பார்வைகள்” என்ற சிறுகதை மூலம் சமுதாயம் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகளை ஆராய்க.

**5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.**

05. “மங்கையற்கரசியின் காதல்” அல்லது “விடியுமா” என்ற சிறுகதையின்
- கதைக்கரு
- கதைக்களம்
- கையாளப்பட்ட உத்திகள் போன்றவற்றை விளக்குக.

06. “நீதிப்பாடல்கள்” பகுதியில் செங்கோண்மை, கொடுங்கோண்மை பற்றி கூறப்பட்டவற்றைத் தொகுத்து எழுதுக.

07. “முத்தொள்ளாயிரம்” என்ற பாடல் பகுதியில் சேர மன்னனின் சிறப்பு எவ்வாறு விளக்கப்படுகிறது.

# எடிசனின் ராஜதந்திரம்

தோமஸ் அல்வா எடிசன் புகழ் பெற்ற விஞ்ஞானி. ஆனால் அவர் சிறந்த வணிகர் என்பது பலருக்கும் தெரியாது, வணிகரான எடிசன் செய்த சில இராஜதந்திரம் சிரிப்பை வரவழைப் பவை. எடிசன் மின்சாரத்தை மேம்படுத்தி டிசி (Direct Current) என்ற வகை மின்சாரத்தை உருவாக்கி அதைச் சந்தைப்படுத்த முயன்று கொண்டிருந்தார்.



எடிசனுக்குப் போட்டியாக வெஸ்டிங்ஹவுஸ் என்ற விஞ்ஞானி மின்சாரத்தை உருவாக்கினார். தனது சோதனைக் கூடத்தில் இருவகை மின்சாரத்தையும் சோதித்த எடிசனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வெஸ்டிங்ஹவுசின் மின் சாரம் எடிசனின் மின்சாரத் தைவிட சக்தி வாய்ந்தது என்பதே முடிவு. அந்த மின்சாரத்துக்கு கெட்ட பெயரை ஏற்படுத்த அதையே பயன்படுத்த முடிவு செய்தார் எடிசன். பத்திரிகை யாளரைக் கூப்பிட்டு அவர்கள் முன் ஒரு இரும்பு நாற்காலியைப் போட்டார் எடிசன். அதில் ஒரு பூனையை உட்கார வைத்து கட்டினார். அப்புறம் அந்த நாற்காயில் தனது டி.சி மின்சாரத்தை பாய்ச்சினார்.

பூனை 10 - 20 நிமிடத்தில் துடிதுடித்துச் செத்தது. அப்புறம் மீண்டும் ஒரு பூனையை உட்கார வைத்து வெஸ்டிங்ஹவுஸின் ஏ.சி மின்சாரத்தைப் பாய்ச்சினார். பூனை இரண்டு வினாடிகளில் செத்துவிட்டது. பார்த்தீர்களா? எனது மின்சாரம் பட்டால் உடனடியாக சாக மாட்டார்கள் பிழைத்துவிடுவார்கள். ஆனால் வெஸ்டிங் ஹவுஸின் மின்சாரம் உடலில் பட்டால் உடனடி மரணம்தான். எனவே எனது மின்சாரமே பாதுகாப்பானது என பிரசாரம் செய்தார் எடிசன். செய்தி காட்டுத்தீ போலப் பரவியது.

எடிசனின் மூளையில் இன்னொரு யோசனை வந்தது. அப்போதெல்லாம் மோசமான குற்றவாளிகள் தலைவெட்டிக் கொலைசெய்யப்பட்டனர். அதற்கு பதில், தான் தயாரித்த மின்சார நாற்காலியில் வெஸ்டிங்ஹவுசின் மின்சாரத்தை ஏற்றி அவர்களைக் கொல்லலாம் என யோசனை கொடுத்தார் எடிசன்.

அதற்கேற்றாற்போல் மின்சார நாற்காலிகளைத் தயாரித்து அரசிடம் விற்றும் விட்டார். இதனால் வெஸ்டிங்ஹவுசின் ஏ.சி மின்சாரத்துக்கு அப்போதெல்லாம் பயங்கர கெட்ட பெயர் உண்டாகிவிட்டது.

# குடல் புற்றுநோயைக் கண்டறியும் நாய்

இதுவரை காலமும் நாய்களின் மோப்ப சக்தியானது போதைப் பொருட்கள், வெடிபொருட்கள் என்பனவற்றைக் கண்டுபிடிப்பதற்கே உதவி வந்தன.

எனினும் அண்மைக்காலமாக நாய்களின் மோப்ப சக்தியின் மூலம் நோய்களைக் கண்டறிய முடியும் என்பது தொடர்பில் அதிகளவான ஆராய்ச்சிகள் இடம் பெற்றுவருகின்றன.

இந்நிலையில் நாய்களின் மோப்ப சக்தியின் மூலம் மனிதர்களின் குடல் புற்று நோயினைக் கண்டுபிடிக்க முடியும் என ஜப்பானிய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.



இதற்காக அவர்கள் கறுப்பு நிற "லெப ரேடர் ரெட்ரேவர்" வகை நாயினை பயிற்றுவித்துள்ளனர்.

குறித்த நாயானது மனிதரின் குடல் புற்றுநோயினைத் துல்லியமாகக் கண்டுபிடிப்பதாகவும் அது கண்டுபிடிப்பவற்றில் 98% சரியானதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

புற்று நோயாளர்கள் வெளிவிடும் சுவாசக் காற்று மற்றும் நோயாளிகளின் மலத்தின் மாதிரிகளில் இருந்தே அந்நாய் நோயைக் கண்டுபிடிப்பதாக அவ்விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

இதன் போது 36 பேரின் சுவாச மாதிரிகளில் 33 பேரையும், 38 பேரின் மல மாதிரிகளில் 37 பேரையும் புற்று நோயாளியாக அந்நோய் இனங் காட்டியுள்ளது. இதன் துல்லியமான கண்டுபிடிப் பிற்காக விஞ்ஞானிகள் இறப்பர் பந்தொன்றினை அந்நாய்க்குப் பரிசளித்துள்ளனர்.

# கனவைத் தடுக்கும் குறட்டை

கனவு காணாத மனிதர்கள் இருக்க முடியாது. பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கும் கனவுகள் வருகின்றன. சில மனநல குறைபாடு உள்ளவர்களைத் தவிர எல்லோருமே கனவு காண்பதாக விஞ்ஞான ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. மிருகங்களும் கனவுகள் காண்பதாகக் கூறப்படுகிறது.



அநேகமானவர்கள் நாளொன்றுக்கு சுமார் நான்கு தொடக்கம் ஏழு கனவுகள் காண்கின்றனர்.

ஒருவர் தூங்கி எழுந்து ஐந்து நிமிடத் திலேயே ஐம்பது சத வீதமான கனவுகள் மறந்து போய் விடுமாம். பத்து நிமிடத்தில் சுமார் தொண்ணூறு சதவீதமான கனவுகள் மறந்து விடுமாம். குறட்டை விடும்போது கனவுகள் வருவதில்லை என சில ஆராய்ச்சிகள் கூறுகின்றன. தூங்குவதற்கு முன் சீஸ் சாப்பிட்டால் கெட்ட கனவுகள் வருவதில்லை எனவும் கூறப்படுகிறது.

எது எவ்வாறாயினும் 'சீஸ்' சாப்பிட்டால் நல்ல நித்திரை வரும் எனவும் அந்தத் தகவல் மேலும் தெரிவிக்கிறது. கனவில் வரும் உருவங்கள், சிந்தனைகள் எமக்கு எப்போதாவது பழக்கமானதாகவே அமைந்திருக்கும். கனவில் புது விடயங்கள் பற்றி வருவதில்லை என சில ஆராய்ச்சிகள் கூறுகின்றன. கனவின் போது நிகழ்காலத்தில் நிகழும் சிலவற்றை உணர முடிகிறது.

உதாரணத்திற்கு நீங்கள் தூங்கும் போது உங்கள் அருகிலிருக்கும் ஒருவர் எதாவது ஒரு இசைக்கருவியை வாசித்துக் கொண்டிருக்கிறார் என்று வையுங்கள், உங்களது கனவில் நீங்கள் ஒரு இசை நிகழ்ச்சியில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படலாம். ஆண்கள் காணும் கனவுகளுக்கு பெண்களது கனவுகளுக்கும் ஒரு முக்கியவித்தியாசம் இருப்பதாக ஆராய்ச்சி முடிவு ஒன்று கூறுகின்றது. அதாவது ஆண்கள் காணும் கனவில் சுமார் எழுபது சதவிகிதம் மற்றைய ஆண்களைப் பற்றியதாகவே இருக்குமாம், ஆனால் பெண்களது கனவுகள் அரைவாசிக்கு அரைவாசி இரு பாலினரையும் சார்ந்ததாகவே இருக்குமாம். மற்றுமொரு முக்கிய அம்சம், கனவுகள் பெரும்பாலும் குரோதம், பொறாமை, சிக்கல் என்பனவற்றை சார்ந்ததாகவே இருக்குமாம். நல்ல கனவுகள் வருவது குறைவாகவே இருப்பதாகக் கூறப்படுகிறது. உங்கள் அனுபவம் எப்படி?

# வரலாற்றில் இடம்பிடித்த

உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய துவக்கு இதுதான். ஜேர்மனியில் 1941 ஆம் ஆண்டு Friedrich Krupp A.G நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. இந்நிறுவனத்தினரின் குடும்பத் தைச் சேர்ந்த முக்கிய பிரமுகரைக் கௌரவிக்கின்ற வகையில் Gustav Gun என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நிறை 1344 தொன். 4.5 மீற்றர் அகலமும், 43 மீற்றர் நீளமும் கொண்டது. மேஜர் ஜெனரல் தலைமையில் 500 பேர் கொண்ட சிப்பாய்கள் இயக்கினார்கள்.



சுடுகின்றமைக்கான ஆயத்தங்களை முழுமையாகச் செய்து முடிக்கின்றமைக்கு சரியாக 54 மணித்தியாலங்கள் எடுத்தன. 10584 பவுண்ட் எடை உடைய எறிகணைகள், 16540 பவுண்ட் எடை உடைய கொன்கிரீட் எறிகணைகள் ஆகியவற்றை இத்துவக்கு மூலம் பிரயோகிக்க முடியும். குண்டுகள் 29 மைல் தொலைவு வரை பாய முடியும். இரண டாம் உலகப் போரின்போது பிரான் ஸின் மசினோ கோடு கோட்டை அரணை ஜேர்மனியப் படையினர் கைப்பற்றுகின்றமையில் இத்துப்பாக்கியின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது.

# கம்பியில்லா விசைப்பலகை




கடன் அட்டை அளவிலான மிகச்சிறிய கம்பியில்லா விசைப்பலகை (கீ போர்ட்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த அரிய கண்டுபிடிப்பை சீனாவின் தெற்குப் பகுதியான குவாங்டாங் மாகாணத்தில் உள்ள ஒரு நிறுவனம் கண்டுபிடித்தது.

அண்மையில் கொங்கொங்கில் நடத்தப்பட்ட ஒரு கண்காட்சி நிகழ்ச்சியில் இந்த மிகச்சிறிய விசைப்பலகை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# சுற்றுலாக் கப்பலாக மாறிய...

வட கொரியாவின் Rajin துறைமுகத்திலிருந்து தென்கொரிய எல்லைக்கருகிலுள்ள கும்காங் மலைப்பகுதிக்கு தனது கன்னிப் பயணத்தை மேற்கொண்டுள்ளது 'மாங்யொங்பொங்' கப்பல். துருப்பிடித்த இந்த முன்னாள் சரக்குக் கப்பலைத் திருத்தி அமைத்துள்ளது வடகொரியா.

இந்தக் கப்பலில் 130 சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்கின்றனர். 9700 தொன் உள்ள இந்தக் கப்பலில் பிளாஸ்ரிக்காலான கதிரைகளே காணப்படுகின்றன. இந்தக் கப்பலில் பலகைக் கட்டில்களும் தரையில் போடப்பட்ட மெத்தைகளும் காணப்படுகின்றன. அத்துடன் உணவுகளும் அலுமினியத் தட்டுக்களிலேயே பரிமாறப்படுகின்றன.



# புதுடில்லி குண்டுவெடிப்பு விசாரணைக்கு 20 பேரடங்கிய தேசிய புலனாய்வுக்குழு

(புதுடில்லி)

புதுடில்லி உயர்நீதிமன்றில் நடந்த குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணை நடத்த 20 அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக தேசிய புலனாய்வு அமைப்பின் தலைவர் எஸ்.ஜி.சின்ஹா அறிவித்தார்.

குண்டுவெடித்த இடங்களில் இருந்து புலனாய்வு அமைப்பு ஆதாரங்களைச் சேகரித்துள்ளது. இந்தக் குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள வெடிபொருள் எந்த வகையைச் சேர்ந்தது என்பது குறித்து பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் ஜம்மு-காஷ்மீர் ஐ.பி.எஸ் பிரிவைச் சேர்ந்த டி.ஐ.ஜி முகேஷ சிங் தலைமையில் இந்தக் குழு செயறபட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பில் 15பேர் பலியானதுடன் பலர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டில்லி குண்டுவெடிப்பில் ஈடுபட்ட இருவரின் மாதிரிப்படம் வெளியீடு

(புதுடில்லி)



தலைநகர் புதுடில்லியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஈடுபட்டார்களெனத் தெரிவித்து இருவரின் படங்களை டில்லிப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவர் சூட்கேசுடன் வந்ததை நேரில் பார்த்ததாகக் கூறிய இருவரிடம் பெறப்பட்ட ஆதாரத்தை வைத்து கணினி மூலம் வரையப்பட்ட படமே வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு பேரும் 25 தொடக்கம் 30வயதுக்கிடைப்பட்டவர்களாக இருக்கலாமெனவும்,இவர்கள் குறித்த தகவல் தெரிந்தால் டில்லிப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தலாமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## டில்லியில் பூமியதிர்ச்சி


(புதுடில்லி)

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு திடீரென்று கடுமையான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இரவு 11.28 மணி அளவில் ஏற்பட்ட இந்தப் பூமி அதிர்ச்சி 6 வினாடிகள் நீடித்தது. இது ரிக்டர் அளவில் 6.6 புள்ளியாக, பதிவாகி இருந்தது.

பூமி அதிர்ச்சி ஏற்பட்ட போது வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இதனால் வீடுகளில் தூங்கிக்கொண்டு இருந்தவர்கள் பயத்தில் வெளியே எழுந்து ஓடி வந்தனர். நகர் முழுவதும் பூமி அதிர்ச்சி உணரப்பட்டதால் ஒரே பரபரப்பாகக் காணப்பட்டது.

இது தவிர டில்லியைச் சுற்றியுள்ள பரிதாபாத்,நொய்டா, காசியாபாத் மற்றும் பல பகுதிகளிலும் பூமி குலுங்கியதால் மக்கள் பீதி அடைந்தனர்.

## மோகன்லால் வீட்டில் மீளவும் சோதனை



(புதுடில்லி)

மலையாள நடிகர் மோகன்லால் வீட்டில்,மீண்டும் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். நடிகர் மோகன்லால் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் கடந்த ஜுலையில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். சென்னை, திருவனந்தபுரம்,கொச்சி, ஊட்டி பகுதிகளில் சோதனை நடந்தது. இந்தச் சோதனையில் யானை தந்தங்கள் வைத்திருந்தது உட்பட ஏராளமான கணக்கில் வராத சொத்துக்களை வருமான வரித்துறையினர் கைப்பற்றினர். இந்த நிலையில் ஊட்டி லவ்வேல், ஹோபார்ட் சாலையில் மோகன்லாலுக்கு சொந்தமான வீட்டில், நேற்றுமுன்தினம் மீண்டும் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். காலை முதல் மதியம் வரை சோதனை நடந்தது.

## டில்லிதிரும்பினார் சோனியா



(புதுடில்லி)

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவந்த காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி நேற்று அதிகாலை 3 மணியளவில் டில்லி திரும்பினார்.

அவருடன் அவரது மகள் பிரியங்காவும் உடன்வந்தார்

கடந்த மாதம் 4ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சோனியாவுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் மருத்துவமனையிலேயே தங்கி அவர் சிகிச்சை பெற்று வந்தார்.

தற்போது உடல்நிலை குணமடைந்துள்ளதையடுத்து டில்லி திரும்பியுள்ளார்.

டில்லி திரும்பினாலும் கட்சிப் பணிகளைக் கவனிக்க மேலு[illegible] சில காலம் ஆகலாம் என்று காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## குஷ்புவுக்கு எதிரான வழக்கு உயர்நீதிமன்றால் தள்ளுபடி



(சென்னை)

சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க பெற்ற வெற்றியை எதிர்த்து கருத்துத் தெரிவித்த நடிகை குஷ்புவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. தமிழக சட்டசபைத் தேர்தல் முடிவு வெளியானதையடுத்து கருத்துத் தெரிவித்த நடிகை குஷ்பு, தேர்தலில் தி.மு.க. தோல்வி அடையவில்லை. தமிழக மக்களுக்குத்தான் தோல்வி ஏற்பட்டுள்ளது. அவர்கள்தான் 5ஆண்டுகளுக்கு பாதிப்படைவார்கள் என்று கூறியிருந்தார்.

இதை எதிர்த்து சேலத்தை சேர்ந்த சட்டத்தரணி அறிவழகன் சென்னை உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார். அதில், தேர்தலில் யாருக்கு வேண்டுமானாலும் வாக்குச் செலுத்துவதற்கு இந்திய குடிமகன் ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது. கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக, அடுத்தவருடைய உரிமையைப் பாதிக்கும் விதத்தில் பேசக்கூடாது. இந்தத் தேர்தலில் படுதோல்வியடைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, எங்களுக்கு தமிழக மக்கள் ஓய்வு அளித்துள்ளனர் என்று கூறியுள்ளார். ஆனால் அந்தக் கட்சியைச் சேர்ந்த நடிகை குஷ்பு, வரும் 5ஆண்டுகளில் மக்களுக்கு துன்பம் ஏற்படப்போகிறது என்று கூறியுள்ளார். இது மக்கள் மத்தியில்,ஆளும் கட்சியின் மீது தவறான எண்ணத்தை ஏற்படுத்திவிடும். இந்த புதிய ஆட்சியை குஷ்பு விமர்சனம் செய்வதில் உள்நோக்கம் உள்ளது. எனவே குஷ்பு மீது இந்திய தண்டனைச் சட்டம் 504(அவமானமான வார்த்தைகளைப் பேசி, பொது அமைதியை கெடுத்தல்) கீழ் நடவடிக்கை எடுக்க சென்னை பொலிஸ் கமிஷனருக்கு உத்தரவிட வேண்டும்,என்று கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி இந்திய தண்டனைச் சட்டம் 504ஆம் பிரிவின் கீழ் கைது நடவடிக்கை எடுக்க முடியாது. புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. எனவே மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்.

இந்தியச் செய்திகள்

## உயிர்க்கோள காப்பகம் அமைப்பதற்கு இராமேஸ்வரத்தில் ஆலோசனைக் கூட்டம்

(ராமநாதபுரம்)

இந்தியாவின் மன்னார் வளைகுடாவில் உள்ள உயிர்க்கோள காப்பகம் போல, இலங்கை கடற்பகுதியிலும் அமைக்கும் நடவடிக்கையில், இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. மன்னார் வளைகுடா உயிர்கோள காப்பகத்தில் 3600க்கும் மேற்பட்ட கடல்வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன. இவை இலங்கை கடல் பகுதியிலும் உள்ளன. அங்கும் இவை வேட்டையாடப் படுகின்றன. இவற்றைப் பாதுகாக்க இலங்கை அரசு,தற்போது முன்வந்துள்ளது. அதன் ஒரு பகுதியாக இந்தியா இலங்கை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்,விஞ்ஞானிகள், சமூக ஆர்வலர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் இராமேஸ் வரத்தில் நடந்தது.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது: மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம் போன்று,இலங்கையிலும் ஏற்படுத்த அந்நாட்டு அதிகாரிகள் ஆய்வு நடத்தினர். அவ்வாறு அமைக்கும் பட்சத்தில், அரிய வகை உயிரினங்கள் இலங்கை வழியாக கடத்தப்படுவது தடுக்கப்படும். இது தொடர்பாக இருநாட்டு அதிகாரிகள் கூட்டம்,இலங்கையில் டிசம்பரில் நடக்கிறது, என்றார்

## தயாநிதிக்கு எதிரான தகவல் அறிக்கை விரைவில் தாக்கல் செய்யப்படுமாம்

(புதுடில்லி)

2 ஜி அலைக்கற்றை வழக்கில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதிக்கு எதிராக விரைவில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படும் என மத்திய புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

ஏர்செல் முன்னாள் தலைவர் சிவசங்கரனை மிரட்டியது, மலேசியாவின் மேக்சிஸ் நிறுவனத்திற்கு ஏர்செல் விற்கப்பட்டவுடன் அதற்கு 2 ஜி அலைக்கற்றை உரிமங்களை வழங்கியது ஆகியவை தொடர்பாக தயாநிதி மாறனுக்கு எதிராக ஆதாரம் இல்லை என்று கடந்த செப்ரெம்பர் முதல் திகதி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில் சி.பி.ஐ. தெரிவித்திருந்தது.

### சி.பி.ஐ.தகவல்

இந்நிலையில் சி.பி.ஐ. முறையாக,சரியாக,நியாயமாக விசாரணை நடத்தவில்லை என்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவை மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் தாக்கல் செய்தார்.

அதைத் தொடர்ந்து சி.பி.ஐ. தனது முந்தைய நிலையிலிருந்து மாறுபட்ட நிலையை இப்போது எடுத்துள்ளது.

இது குறித்து சி.பி.ஐ. தரப்பில் கூறுகையில், நாங்கள் தயாநிதி மாறன் நிரபராதி என்று கூறவில்லை. இந்த மாத இறுதியில் இந்த வழக்கில், முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளது.

சிவசங்கரன் தலைமையிலான ஏர்செல் நிறுவனத்துக்கு உரிமம் வழங்க தயாநிதி மாறன் ஏன் தாமதம் செய்தார் என்பது குறித்து விசாரித்து வருகிறோம்.

இது வேண்டுமென்றே செய்யப்பட்ட தாமதமா என்று ஆராய்ந்து வருகிறோம் என்றும் தெரிவித்துள்ளது.

ஏர்செல்லை மேக்சிஸ் வாங்கிய பின்னர் அந்த நிறுவனத்திற்கு 2 ஜி அலைக்கற்றை உரிமங்களை படுவேகமாக தயாநிதி மாறன் வழங்கியதாகவும் அதற்குப் பிரதிபலனாக சன் தொலைக்காட்சி குழுமத்தில் மிகப் பெரிய முதலீட்டை மேக்சிஸ் செய்தது என்பதும் குற்றச்சாட்டாகும்.



டில்லி உயர்நீதிமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 11பேர் பலியாகினர். சம்பவம் நடந்த இடத்தை பார்வையிடும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல்.

உலகச் செய்திகள்

# சுனாமியால் பெற்றோரை இழந்த சிறுவர் மன அழுத்தத்திற்கு ஆளாகும் வாய்ப்பு

### தடுக்க ஜப்பான் அரசு நடவடிக்கை

(டோக்கியோ)

சுனாமி, நிலநடுக்கத்தால் பெற்றோரை இழந்த சிறுவர்கள் எதிர்காலத்தில் கடும் மன அழுத்தத்திற்கு ஆளாகும் வாய்ப்பு உள்ளது என ஜப்பான் அரசு கவலை வெளியிட்டுள்ளது. இதனால் இதைத் தடுக்கும் வகையில் ஜப்பானில் நல மையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஜப்பானில் கடந்த மார்ச் மாதம் ஏற்பட்ட மிகப்பெரிய நில நடுக்கத்தாலும், சுனாமியாலும் பெற்றோரை இழந்த குழந்தைகளின் நலனுக்காக 3 மாநிலங்களில் நல மையங்களைத் தொடங்க ஜப்பானிய அரசு திட்டமிட்டுள்ளது.

இவாடே, மியாகி, புகுஷிமா ஆகிய மாநிலங்களில் இந்த மையங்கள் நிறுவப்படும். சுமார் 1,500 குழந்தைகள் தாய், தந்தை இருவரையோ அல்லது இருவரில் ஒருவரையோ இழந்துவிட்டனர்.

இவர்கள் மன ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போதைக்கு இவர்கள் தங்களுடைய சோகங்களை மறந்துவிட்டது போலத் தெரிந்தாலும் எதிர்காலத்தில் இந்தச் சோகத்தால் அவர்கள் கடும் மன அழுத்தத்துக்கு ஆளாகும் வாய்ப்பு இருக்கிறது. எனவே இவர்களுடைய ஆழ் மனதில் உள்ள சோகத்தை ஆற்ற இந்த மையங்கள் உதவும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

நடப்பு நிதியாண்டில் 3.5 கோடி அமெரிக்க டொலர்கள் இதற்காக ஒதுக்கப்படும். ஓகஸ்ட் 31 வரை மொத்தம் 234 குழந்தைகள் அனாதைகளாகி விட்டனர். இவர்களில் 93 பேர் இவாடே, 120 பேர் மியாகி, 21 பேர் புகுஷிமாப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

1,295 குழந்தைகள் தாயையோ தந்தையையோ இழந்தவர்கள். ஜப்பானில் இந்தப் பகுதியில் அரசுக்கு உதவ குழந்தைகளுக்கென 300 உளவியல் நிபுணர்கள் தான் இருக்கின்றனர். இந்த எண்ணிக்கை போதாது என்று அரசு கருதுகிறது.

இந்தப் பற்றாக்குறையைப் போக்க குழந்தைகளுக்கு வழிகாட்டும் அலுவலகங்களின் அதிகாரிகள், தன்னார்வத்தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த உறுப்பினர்களையும் பயன்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

# கடாபி பதுங்கியுள்ள இடத்தை கிளர்ச்சியாளர்கள் சுற்றிவளைப்பு?



(திரிபோலி)

லிபியாவின் தெற்கு எல்லை ஓரமாக கடாபி பதுங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளதால் அவர் இருப்பதாகச் சொல்லப்படும் இடம் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது என எதிர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கடாபியின் பாதுகாப்புப் படைத் தளபதி உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் பலர் நைஜர் நாட்டுக்குள் வந்துள்ளதாக அந்நாடு தெரிவித்துள்ளது.

லிபியா மற்றும் நைஜர் எல்லைப் பகுதியில் உள்ள க்வாத் என்ற கிராமத்தின் ஏதாவது ஒரு பகுதியில் கடாபி பதுங்கியிருக்கலாம் என்று தகவல் கிடைத்ததால் கடாபி எதிர்ப்பாளர்கள் அப்பகுதியை முற்றுகையிட்டுள்ளனர்.

அதேநேரம் கடாபியின் நைஜருக்குள் நுழைய முற்பட்டால் தடுத்து நிறுத்தும்படி லிபிய இடைக்கால அரசு நைஜர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்நிலையில் கடாபியின் பாதுகாப்புப் படைத் தளபதி மன்சூர் டாவ் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் சிலர் நைஜர் நாட்டுக்குள் வந்து விட்டதாக அந்நாட்டு அதிபரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். இதையடுத்து கடாபியின் உதவியாளர்களில் ஒருவரையாவது கைது செய்யும்படி அமெரிக்கா நைஜர் அரசை வற்புறுத்தியுள்ளது.

இதற்கிடையில் பானி வாலித் நகர் பழங்குடியினத் தலைவர்களுடன் எதிர்ப்பாளர்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். நகரில் உள்ளவர்களுக்கு தங்களால் எவ்வித பாதிப்பும் சேதமும் ஏற்படாது என உறுதியளித்துள்ளனர்

# ஒசாமா கொல்லப்பட்ட செய்தியில் மகிழ்ச்சியடையாத ஜோர்ஜ் புஷ்

(வொஷிங்டன்)


அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட செய்தி கேட்டு மகிழ்ச்சியடையவில்லை என்று முன்னாள் அமெரிக்க அதிபர் ஜொர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆவணப்படங்கள் தயாரிக்கும் பீட்டர் ஸ்னால் சி.என்.என் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில், ஜோர்ஜ் புஷ் டாலாஸில் உள்ள ஒரு உணவகத்தில் இருந்த போது அமெரிக்க அதிபர் ஒபாமா உங்களுடன் பேச விரும்புகிறார் என்று ரகசிய சேவை பொலிசார் தெரிவித்தனர்.

அப்போது தான் அவருக்கு ஒசாமா கொல்லப்பட்டது தெரியவந்தது. இந்தச் செய்தியைக் கேட்டதும் எனக்கொன்றும் மகிழ்ச்சியாக இல்லை என்று புஷ் தெரிவித்தார்.

அப்பாடா ஒரு வழியாக முடிந்தது என்ற உணர்வு தான் என்னிடம் இருந்தது என்று கூறியுள்ளார். 9/11 தாக்குதலின் 10ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி ஸ்னால் ஒரு ஆவணப்படம் தயாரித்துள்ளார்.

அதற்காக அவர் புஷ்சிடம் பேட்டி எடுத்துள்ளார். அவருக்கு புஷ் அளித்த பேட்டியில், இரட்டைக் கோபுரத் தாக்குதல் நடந்த போது நான் புளோரிடாவில் உள்ள ஒரு பள்ளியில் இருந்தேன். நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையத்தின் ஒரு கோபுரம் தாக்கப்பட்டுள்ளது என்றதும் ஏதோ சிறிய ரக விமானம் என்று முதலில் நினைத்தேன்.



வானிலை மோசமாக இருந்திருக்கும் அல்லது விமானிக்கு ஏதாவது நடந்திருக்கும் என்று நினைத்தேன். வெள்ளை மாளிகை தலைமை ஊழியர் ஆன்டி கார்ட்ஸ் இன்னொரு கோபுரமும் தாக்கப்பட்டது என்று காதில் மெதுவாகக் கூறினார். அப்போது தான் அது தீவிரவாதத் தாக்குதல் என்பதை உணர்ந்தேன் என்று கூறியுள்ளார்

# பதிவிறக்கப் பெட்டகம்

மனிதர்களுக்கு அளிக்கப்பட்ட பெரும்பேறு அவர்கள் தங்கள் உள்ளத்தைத் தங்களுக்குள்ளே ஒளிக்க முடியும் என்பது.

**– யாரோ**

நான் தனிமையில் இருக்கும் போதெல்லாம் மரணத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விடுகிறேன். அல்லது மரணத்தைப் பற்றிச் சிந்திக்கும் போதெல்லாம் தனியனாகி விடுகிறேன்.

**– ஜோன் அண்டர்சன்**

மரணம் அதுவரையில் வாழ்க்கைக்கு இல்லாத ஓர் ஒழுங்கையும் அர்த்தத்தையும் உருவாக்கி அளிக்கிறது.

**– காம்யூ**

மரணம் தழுவிய மக்கள் எல்லோர்க்கும் கல்லறை எழுப்பும் கௌரவம் வரும் வரை, சாம்பலும் தூசும் என் கல்லறையாக இருக்கட்டும்.

**– இறையன்பு**

என்னையே எனக்குப் பிடிக்காத சந்தர்ப்பங்கள் உண்டு. எனது கோபங்கள் என்னிடமிருந்து வெளிப்படுகின்ற சந்தர்ப்பங்களே அவை. அந்தமாதிரி சந்தர்ப்பங்களில் நான் மிகவும் இழிந்தவன் ஆகிறேன். பிறரை முன்னிறுத்தி என்னையே நான் அவமதித்துக் கொள்கிறேன். கோபம் என்மீது ஒரு சாபமாய்க் கவிந்து என் ரூபமே கருமை படர்ந்து விடுவதாய் நான் உணர்கிறேன். எனது நிதானமும், எனது இனிய சுபாவங்களும், எனது அறிவாற்றலும், என்னைப் பற்றிய எனது நம்பிக்கைகளும் அந்த நிமிடங்களில் முழுமையான பொய்யாகி விடுகின்றன. இவற்றை எல்லாம் இழந்தபின் நானே எனக்கு அந்நியமாகி விடுகிறேன். எல்லாவற்றையும் சினந்து ஒரு பேயாய் நிற்கிற என்னையே நான் வெறுக்கிறேன்.

**– ஜெயகாந்தன்**

காரணங்கள் எவையாயுமிருக்கலாம். கல்லாலும் சொல்லாலும் மனதாலும் மற்றவரைத் தாக்கிக் காயப்படுத்தும் வன்மம் என்னிடமிருந்து அகலவில்லை. நான் இத்தனை ஆண்டுகளாகப் பயின்றவை, நம்பியவை, போதித்தவை என்னையே மேம்படுத்தவில்லை எனில், என்னையும் வன்மக் குழிக்குள் கொண்டு செலுத்துகிறது எனில், கலை இலக்கியம் பண்பாடு என நான் புலம்பித் திரிவதன் பொருள் என்ன?

**– நாஞ்சில் நாடன்**

செய்ய விரும்புவதை செய்ய முடியாமல் போகிற கையாலாகாத்தனம், செய்ய விரும்பாததை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம், இந்த இரண்டு அவஸ்தைகளாலும் நெருக்கப்படும் போது ஏற்படும் வலி என்னுடையது.

**– மார்லன் பிராண்டோ**

நினைவின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் பிழைகளின் அவமானம்.

**– சுந்தர ராமசாமி சிறுகதையில்**

பாலனாய் கழிந்த நாளும், பனிமலர் கோதைமார் தம் மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவோடு மூப்பு வந்து கோலனாய் கழிந்த நாளும், குறிக்கோள் இலாது கெட்டேன்.

**– திருநாவுக்கரசர்**

நம்முடைய நன்னடத்தை என்பது பொலிஸ்காரர்களினாலேயே.

**– பேர்ணாட் ஷோ**

என்னை யாரென்று வினவப் போகும் உங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் நடுங்குகிறது உடம்பு.

**– தேவேந்திரபூபதி**

பறவைகள் பாடுவது அவற்றிடம் விடைகள் உண்டு என்பதற்காக அல்ல, அவற்றிடம் பாடல்கள் உண்டு என்பதற்காக.

**– சீனப்பழமொழி**

விடைகளைத் தேடிப் போகலாம். தொடர்ந்து தேடிக் கொண்டிருக்கலாம். நாம் சற்றும் எதிர்பாராத நேரத்தில் அவை வெளிப்பட்டு நம்மைப் பரவசத்தில் ஆழ்த்தக் கூடும். ஆனால் முன்தீர்மானங்கள் பயணத்தைத் தொடர விடுவதில்லை. காத்திருக்க விடுவதில்லை. தேட விடுவதில்லை.

**– ஜேஜே சில குறிப்புகள்**

புத்தி பேதலித்துவிட்ட இவ்வுலகில், தானும் பைத்தியமாவது ஒன்றுதான் புத்தி தெளிவுடைய ஒருவன் செய்யக்கூடிய புத்தித் தெளிவான ஒரே செயல்.

**– ஆர்.டி. லேயிங்**

கவிஞர்களும், மேதைகளும் ஏதோ சில தருணங்களில் பித்தர்களாகத் தோற்றம் தரக் கூடும். ஆனால் பித்தன் போலத் தோற்றமளிப்பதுதான் மேதையாக மாறுவதற்கு முதல்படி என்று ஒருவர் நினைத்துவிட்டால், அது மிகவும் அபாயகரமானது.

**– அசோகமித்திரன்**

ஒவ்வொரு ஏமாற்றமும் ஒரு புதிய நம்பிக்கையைத் தன் மடியில் சுமந்தே வருகிறது. அதைப் போன்றே நம்பிக்கையும் ஒரு புதிய ஏமாற்றத்தை!

**– திலீப்குமார்**

# இந்தியக் கடற்படையின் போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை

## சீன உளவுக்கப்பலின் எதிரொலியா?

(கொழும்பு)

இந்தியக் கடற்படையின் போர்க்கப்பலான "ஜஎன்எஸ் குதார்' கொழும்புத் துறைமுகத்துக்கு திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த இந்தியக் கடற்படைப் போர்க்கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்துள்ளனர்.

91.1 மீற்றர் நீளம் கொண்ட இந்தப் போர்க்கப்பலில் 25 அதிகாரிகளும், 160 கடற்படையினரும் வந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்று வரை இந்தியப் போர்க்கப்பல் கொழும்பிலேயே தரித்து நிற்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தமான் கடற்பகுதியில் வேவு பார்த்த சீன வேவுக் கப்பல் ஒன்றை, இந்தியக் கடற்படை துரத்திச் சென்ற போது கொழும்புத் துறைமுகத்தில் அடைக்கலம் தேடியதாக கடந்தவாரம் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால் வேவு பார்க்கும் சிறப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட எந்தவொரு சீனக் கப்பலும் கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசிக்கவில்லை என்று இலங்கை கடற்படை கூறியிருந்தது.

இந்தநிலையிலேயே இந்திய கடற்படையின் போர்க்கப்பல் திடீரென கொழும்புக்கு பயணம் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மீனவர் நால்வர் இந்திய மீனவரால் மீட்பு

(கொழும்பு)

இந்தியக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் நால்வர் இந்திய மீனவர்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் நான்காம் திகதி முதல் இந்தியக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த குறித்த மீனவர்கள் ஆந்திரப் பிரதேச மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் அவர்கள் பாதுகாப்பாக கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இல்ங்கை மீனவர் பயணித்த படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறினால் இந்த நிலைமை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது அவர்களுக்கு உணவு, பாதுகாப்பு, மருத்துவ உதவிகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருவதாக இந்தியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## சட்டவிரோத நாணயத்தாள் மூன்று பேர் காலியில் கைது

(கொழும்பு)

காலி வதுரம்ப பகுதியில் சட்டவிரோத ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் 12 உடன் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் பிட்டிகல, அம்புகொட பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த இளைஞர்கள் மேலும் மூன்று, ஆயிரம் ரூபா நாணயத்தாள்களை கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். பணத்தை அச்சிடுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன

## பரிந்துரைகளை அமுல்படுத்த பெற்றோலிய அமைச்சர் பணிப்பு



(கொழும்பு)

தரக்குறைவான பெற்றோல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை காலதாமதமின்றி அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், தரக்குறைவான பெற்றோலினால் பாதிப்படைந்த வாகன உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான உடனடி மதிப்பீட்டினை மேற்கொள்வதோடு மட்டுமல்லாது சம்பவத்துடன் தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் அவர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹரி ஜயவர்த்தனவுக்கு உத்தர விட்டுள்ளார்.

## கிளிநொச்சியில் காணி மானிய பட்டயம் உரிமையாளர்களுக்கு வழங்கல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, கரைச்சி மற்றும் பூநகரிப் பிரதேசத்தினைச் சேர்ந்த 100 பயனாளிகள் காணிகளுக்கான மானியத்தினை பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வானது கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த 6ஆம் திகதி இடம்பெற்றது.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானக பண்டார தென் னக்கோன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கடந்த காலங்களில் காணி உறுதிகளை இழந்த மக்களுக்கு மானியத்திற்கான பட்டயத்தினை வழங்கினார்.காணி உறுதிகளை தொலைத்த ஏனைய மக் களுக்கும் விரைவில் மானியங்கள் வழங்கப்படுமெனவும் அரசாங்கம் இவ்வாறான பிரச்சினைகளை வட மாகாணத்தில் தீர்ப்பதற்கு பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி பிரதி அமைச்சர் சிறிபால கமலத், வட மகாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரி.அசோக பீரிஸ், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வட மாகாண காணி ஆணையாளர் பி.தயானந்தன், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர்கள், வட மாகாண சபையின் பிரதிப். பிரதம செயலாளர்கள் காணி உத்தி யோகத்தர்கள் மற்றும் பல்வேறு அரச திணைக் கழகங்களைச் சேரந்த உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்கள்

## உள்ளூராட்சி தேர்தல் கடமைகளில் பிறமாவட்ட அரச அதிகாரிகள்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக தேர்தல் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் வசிக்கும் அரச ஊழியர்களை ஈடுபடுத்தாமல் இருப்பதற்கு தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

சுயாதீன மற்றும் கட்சி சார்பற்ற தேர்தலொன்றை நடத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தேர்தல்கள் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

அதன் பிரகாரம் குறித்த பகுதிகளில் நிறுவப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு வேறு பகுதிகளைச் சேர்ந்த அரச அதிகாரிகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

இதன் அடிப்படையில் பாதுகாப்பு பிரிவு உறுப்பினர்களுக்கு மாத்திரம் தபால மூலம் வாக்களிக்க சந்தரப்பம் வழங்கப்பட்டுள்ளது.

23 உள்ளூராட்சி மன்றங்களுக்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் எட்டாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்காக இம்முறை நான்காயிரத்து 905 வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால மூல வாக்களிப்பு இம்மாதம் 29 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

## சிமெந்து கொள்கலன்களை விடுவிப்பதற்கு அனுமதி

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திலிருந்து சிமெந்துப் பொதிகளைக் கொண்ட மூன்று கொள்கலன்களை விடுவிக்க இலங்கை தரநிர்ணய நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளதாக இலங்கை தேசியக் கூட்டுறவுச் சபை தெரிவித்துள்ளது.

குறித்த கொள்கலன்கள் நேற்றுமுன்தினம் மாலை 3 மணியளவில் களஞ்சிய சாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் பந்து ரணவக்க தெரிவித்துள்ளார்.


மேலும் குறித்த சிமெந்துப் பொதிகளின் தேவையான தரம் உறுதிப்படுத்தபடும் வரை அவை சந்தைக்கு விநியோகிக்கப் படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்று தேவையான தரம் உறுதிப்படுத்தப்பட்டு ஓரிரு நாட்களின் பின்பு அவை சந்தைக்கு விநியோகிக்க கூடிய சந்தர்ப்பம் உள்ளதாக அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



செட்டிக்குளம் மெனிக்பாம் கிராமத்தில் குடியேற்றப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட மக்களையும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உத்தியோக பூர்வமாக வீட்டினை கையளிப்பதையும் காணலாம் (39)

# மாநகர சபையில் சூடு கிளப்பும் விவாதம் 'கிறீஸ் பூதம்' ஏற்படுத்திய குழப்பம்



(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மர்ம மனிதர்கள் மற்றும் கிறீஸ் மனிதர்களின் பிரச்சினை தொடர்பாக யாழ்.மாநகர சபையின் நேற்றைய மாதாந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபை எதிர்க் கட்சித் தலைவர் மு.றெமீடியஸ் கண்டனத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

யாழ்.மாநகர சபையின் 8 ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் ஆரம்பமாகியது.

முதலில் 7 ஆம் மாதாந்தக் கூட்ட அறிக்கையினை யாழ்.மாநகர சபையின் செயலாளர் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க ஆயத்தமாகியபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர எதிர்க்கட்சித் தலைவர் மு.றெமீடியஸ் எழுந்து அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் நீடித்து வரும் மர்ம மனிதர்களின் தாக்குதல்கள் மற்றும் அச்சம் காரணமாகவும் அதனைச் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்து கண்டனத் தீர்மானமொன்றைக் கொண்டு வந்தார். அவரது தீர்மானத்தில் பொலிஸாரும், இராணுவத்தினரும், அரசும் இந்த மர்ம மனிதர்கள் பிரச்சினையின் பின்னணியில் இருந்து செயற்படுவதாகவும், நாவாந்துறைச் சம்பவத்தின் பின்னரும் இது தொடர்வதாகவும், மாலை 7.30 மணிக்கு பிற்பாடு சகல பகுதிகளும் மக்கள் நடமாட்டமின்றிக் காணப்படுவதாகவும் தெரிவித்து ஜனநாயகப் பண்புகளுக்கு உட்பட்டு கடந்த மாதாந்தக் கூட்டத்தில் முஸ்லிம் மக்களது பிரச்சினைகள் குறித்ததான கண்டனத் தீர்மானத்தின் போது சபையை முதல்வர் ஒத்திவைத்தது போன்று இன்றைய சபை அமர்வையும் ஒத்திவைக்கும் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார். இதனைத் தொடர்ந்து எதிர்கட்சி உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடுகளும், குழப்பமும் நிலவியது. நான் கொண்டு வந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லையெனின் அதனை வாக்கெடுப்புக்கு விடும்படி முதல்வரை றெமீடியஸ் கேட்டுக்கொண்டார். இதற்குப் பதிலளித்த முதல்வர் மர்ம மனிதர்கள் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவின் யாழ்.விஜயத்தின் பின்னர் மர்ம மனிதர்களின் நடவடிக்கைகள் குறைந் திருப்பதாகத் தெரிவித்ததுடன், ஏற்கனவே மாநகரசபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதனைத் தொடர்ந்தும் சபை நவடிக்கைகளை ஒரு மணிநேரம் ஒத்திவைத்துவிட்டு மீண்டும் சபை கூடுவதுடன், குறித்த கண்டனத் தீர்மான அறிக்கை ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உள்ளூராட்சி அமைச்சர், யாழ்கட்டளைத் தளபதி, பொலிஸமா அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதனை அடுத்து சபை நடவடிக்கையை முழுமையாக ஒத்திவைக்கும் தமது பிரேரணை நிறைவேற்றப்படாததை அடுத்து மாநகர எதிர்கட்சித் தலைவர் மு.றெமீடியஸ் சபையில் இருந்து வெளியேறினார். (பா)

## நடைமுறையில் மாற்றம் பிணை பெற்றவர்களுக்கு நன்மை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்றத்தில் கையெ முத்திடும் நிலை மாற்றப்பட்டுள் ளது. இவ் நிபந்தனை ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழ மைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பிணையில் சென்றவர்கள் கையொப்பமிட முடியும் என்று யாழ். நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் பிணை யில் சென்றவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கையொப்பம் இடும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது இது மாற்றப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (எஸ்)

## விசேட கருத்தரங்கு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தல்களில் வெற்றிபெற்ற உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றனை இம்மாத இறுதியில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இக்கருத்தரங்கில் மார்ச் 13 மற்றும் ஜுன் 23 ஆம் திகதிகளில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றிபெற்ற உறுப்பினர்களே இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் பிரகாரம் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மூவாயிரத்து 959 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் டொக்டர் நிஹால் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் நிர்வாக முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப் படவுள்ளது.

## நாடாளுமன்ற....

மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் இன்னமும் பூர்த்தியடையாமல் உள்ளன. இவர்களுடைய விவரங்கள் திருத்தப்பட்ட வாக்காளர் இடாப்பில் உள்ளடக்கப்படவில்லை.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கடந்த ஆண்டின் வாக்காளர் இடாப்பு உண்மையில் முழுமையானதல்ல. 90 வீதமான முஸ்லிம் மக்கள் புத்தளம், கொழும்பு, மன்னார் என நாட்டின் வெளி மாவட்டங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் புதிய வாக்காளர்களையும் இணைத்து மதிப்பிட்டால் சுமார் 20,000 இற்கு மேற்பட்ட வாக்காளர்கள் தேர்தல் ஆணையகத்தின் பட்டியலில், இணைத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே அவர்களும் சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பினால் யாழ்ப்பாணத்தின் வாக்காளர் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்ற போது சபை உறுப்பினர் எஸ்.விஜயகாந்தால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (பா)

## மர்ம மனிதன்...

தொடர்புபடுத்தப்பட்டு பெரிய விடயமாக மாற்றப்படுகிறது.

மர்ம மனிதன் தொடர்பான எந்த முறைப்பாடுகளையும் பயமின்றி நீங்கள் பொலிஸாருக்கு தெரிவிக்கலாம்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தெல்லிப்பளை பிரதேசங்களில் உள்ள மக்கள் 0713399995, 0212332195, 0213215197 போன்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம்.

இதேபோன்று யாழ்ப்பாண மக்கள் 021-2222222, 021-2229753, சுன்னாகம், 021-2240323, மானிப்பாய் 021-2255160, ஊர்காவற்றுறை 021-3216934, 0772009111, 0213215390, 0715188168, வட்டுக் கோட்டை 0213213523, நெடுந்தீவு 0213213337, 0773732345, கொடிகாமம் 0724478938, 0213210826, 0213213306 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

இதுதவிர பொலிஸ் நடமாடும் சேவை, விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. வீதி மின் விளக்குகள் இல்லாத இடங்கள் இனங்காணப்பட்டு மின் விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன. எனவே கிறீஸ் மனிதன் தொடர்பாக எவ்வித கவலையும் கொள்ளத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டது. (எஸ்)

## ஏழாலை.....

என பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டார். சந்தேகநபரை அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிபதி ஆனந்தராஜா உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று குறிப்பிட்ட இளைஞனுக்குப் பிணை கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பிட்ட இளைஞன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரகாரம் உரிய வகையில் கைது செய்யப்படவில்லை என்பதை பிரதிவாதி சார்பாகச் சட்டத்தரணி என்.சிறிக்காந்தா வாதிட்டார். வாதத்தினை ஏற்ற நீதிபதி குறித்த சந்தேகநபருக்கு நிபந்தனை அடிப்படையில் பிணை வழங்கினார். வாதத்திற்குச் சட்டத்தரணிகள் எம்.றெமிடியஸ், பி.தவபாலன், திருமதி சர்மினி விக்னேஸ்வரன் ஆகியோர் அனுசரணை வழங்கினர். அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வடக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்கு என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசியல்....

xxxii பிரிவு 2.4 குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். தாபன விதிக்கோவை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

"எந்த அரசாங்க கட்டடம் அல்லது வேறு அரச வேலைத் தளத்திலும் அரசியல் கூட்டம் எதுவும் நடத்தப்படலாகாது. எனினும், இவ்விதி வழக்கமான வேலை நேரத்திற்கு அல்லது வேறு நேரத்தில் எந்த தொழில் சங்க கூட்டமும் திணைக்களத் தலைவரின் அனுமதியுடன் நடத்தப்படுவதை விலக்காது. ஆனால அத்தகைய கூட்டங்களில் சம்பந் தப்பட்ட தொழிற்சங்க உறுப்பினர்கள் அல்லது தொழிற் சங்கத்தால் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் அல்லாத வேறு ஒருவரும் பிரசன்னமாகி இருத்தலாகாது" என உள்ளது. (109)

## மக்களது இயல்பு வாழ்வை...

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில், கூட்டமைப்பினரான நீங்கள் எமது இளைஞர்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கும் விதத்தில், எமது மக்களின் எதிர்காலத்தை ஓர் இருண்ட யுகத்திற்கு மீண்டும் தள்ளும் விதத்தில் வெறும் இனவாதக் கருத்துக்களைக் கொண்ட பேச்சுக்களினூடாக மக்களிடமிருந்து வாக்குகளை அபகரிக்க முயன்றிருக்கிறீர்கள். இது உலகுக்கே தெரியும்.

யுத்தத்தின் பின்னர் மிகவும் துன்பத்தில் இருந்த எமது மக்கள் இன்று மீளக்குடியேறி இயல்பு வாழ்க்கையை நோக்கி நம்பிக்கையுடன் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களைப் போன்று நீங்கள் உங்களுடைய உணர்ச்சிப் பேச்சுக்களாலும், வீர முழக்கங்களாலும் அவர்களைத் தவறான அரசியல் வழிக்கு இழுத்துச் சென்று மீண்டும் நடுக்காட்டுக்குள் விட வேண்டாம் என இச்சபையிலே உங்களிடம் உருக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சந்திர குமார் எம்.பி. குறிப்பிட்டார்.

## 135 பேருக்கு திடீர் சுகயீனம்

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் 135 பேர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், உட் கொண்ட உணவு விசமானதானலேயே இவர்கள் சுகவீன முற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை சுகவீன முற்றவர்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பிணை பெற்றவர்களுக்கு நன்மை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்றத்தில் கையெழுத்திடும் நிலை மாற்றப் பட்டுள்ளது. இவ் நிபந்தனை ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை பிணையில் சென்றவர்கள் கைப்பம் இட முடியுமென்று யாழ்.நீதிமன்றம் அறிவித்துள்ளது.

செய்திப்பாணம்

**பூனம்பாண்டே இப்பகுமரி பச்சிளம் பருவம்போல்**
**மானம்போற எண்ணம் மனமெடுத்து - தானமாவுடல்**
**ஆடைகளைந்து காட்ட அமைதியுறும் ஆணினமோ**
**தோடையென ஆய்ந்துமே தொலை!**



# நகரின் நடுவீதியில் சிறுவன் அந்தரிப்பு; காற்றுடன் கலக்கும் சிறுவர் உரிமை



யாழ். நகரப்பகுதியில் அநாதரவாக மயக்கமுற்ற நிலையில் சிறுவன் ஒருவன் யாழ். பொலிஸாரினால் மீட்டெடுக்கப்பட்டுள்ளான்.

குறித்த சிறுவன் சாட்டி சின்னமடுப் பகுதியைச் சேர்ந்த சுவேதலிங்கம் (வயது - 12) என அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை தந்தை தன்னை வெளியில் அனுப்பிவிட்டதாகவும், வலிப்பு நோய் அடிக்கடி ஏற்படுவதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளான்.

மேலும் கல்வி கற்பதற்கு விரும்புவதாகத் தெரிவித்துள்ளதுடன் சில நாட்கள் தனிமையில் கழிந்த படியினால் மனநிலை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றான்.

எனவே இச் சிறுவனின் பெற்றோர் அல்லது உறவினர்கள் யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (எஸ்)

# பொலிஸ் வேட்டையில் கொழும்பில் ஒருவர் பலி!



(கொழும்பு)

கிரான்பாஸ் பகுதியில் நேற்றிரவு பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது பாதாள உலக கும்பலைச் சேர்ந்த நபரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளாதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார். மேலும், பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இருவர் தப்பிச் சென்றுவிட்டதாகவும் ரி 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை தப்பிச் சென்ற இருவரையும் கைது செய்யவென விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நடமாடும் சேவை பொலிஸார் ஏற்பாடு

கிளிநொச்சி தலைமைப் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் பொலிஸ் நடமாடும் சேவை ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை கிளிநொச்சி இராமநாதபுரம் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச் சேவையில் பிறப்பு, இறப்புப் பதிவுகள், மருத்துவம் மற்றும் காப்புறுதி தொடர்பான சேவைகளும் இடம்பெறவுள்ளதால் இப் பிரதேச மக்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (77)

## உயர்தரப் பரீட்சை முடிவுகள் நவம்பர் இறுதியில்

நடந்துமுடிந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகளை நவம்பர் மாத இறுதிக்குள் வெளியிட பரீட்சைகள் திணைக்களம் எதிர்பார்த்துள்ளது. இம்முறை நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் 147,761 பரீட்சாத்திகளும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் 147,100 பரீட்சாத்திகளும் தோற்றியுள்ளனர். பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளின் மூன்றாம் கட்டம் தற்போது இடம்பெற்று வரும் நிலையில் எதிர்வரும் 30 ஆம் திகதி நிறைவுக்கு வரவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ‘ஏற்றுக்கொள்ளப்பட்ட பொய்கள்’ ஆவணப்படம் ஐ.நா.வில் வெளியீடு

(கொழும்பு)

சனல் - 4 இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து வெளியிட்ட ஆவணப்படத்திற்கு பதிலளிக்கும் முகமாக “ஏற்றுக் கொள்ளப்பட்ட பொய்கள்” என்ற ஆவணப்படம் ஐக்கிய நாடுகள் சபையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவிற்கான இலங்கை நிரந்தர வதிவிடப்பிரதிநிதி கலாநிதி பாலித கொஹன மற்றும் துணைப்பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா ஆகியோர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தனர். புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் சரணடைவது குறித்த கலாநிதி பாலித கொஹனவின் வகிபாகம் என்னவென இங்கு கேள்வி எழுப்பப்பட்டது.

புலிகளின் உயர்மட்ட சரணடைந்த தலைவர்கள் தமது அனுபவங்களை பகிர்ந்துகொள்ள தற்போது தயாராகவுள்ளதாகவும் சரணடைவின் பின்னர் அவர்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்று அவர்கள் தெளிவுபடுத்துவார்கள் என்றும் தெரிவித்தார்.

# நீதி அமைச்சால் புதிய சட்டப் பிரேரணை எதிர்தரப்பு அமளியால் விவாதம் ஒத்திவைப்பு

குற்றவியல் வழக்கு கட்டளை சட்டத்தின் கீழான புதிய விசேட ஏற்பாடுகள் தொடர்பிலான விவாதம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. என எதிர்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க அவையில் எழுந்து எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இந்நிலையில் குற்றவியல் வழக்கு கட்டளை சட்டத்தின் கீழான புதிய விசேட ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாடாளுமன்ற அவை நடவடிக்கைகள் 30 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டது. அதன் பின்பு நாடாளுமன்றம் கூடிய போது குறித்த பிரேரணை தொடர்பிலான விவாதம் பிரிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்படுவதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி அறிவித்தார்.

## முன்னாள் பொலிஸ் மா அதிபர் காலமானார்



இலங்கையின் முன்னாள் பொலிஸ் மா அதிபர்களுள் ஒருவரான எல்.டி.சி.ஹேரத் நேற்று காலமானார். எல்.டி.சி.ஹேரத் நீண்ட நாட்கள் சுகயீனமுற்றிருந்த நிலையில் நேற்று காலமானார். 1985-12-06 தொடக்கம் 1988-07-31 வரையான காலப் பகுதியில் இலங்கையின் பொலிஸ மா அதிபராக எல்.டி.சி.ஹேரத் கடமையாற்றினார். இவருடைய மறைவிற்கு பொலிஸ திணைக்களம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

# நாளை மாகாண மட்ட சிறுவர் சித்திரப்போட்டி

(கொழும்பு)

மாகாணக் கல்வித்திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான சித்திரப்போட்டி நாளை மாகாணக் கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியாளர்கள் பின்வரும் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

01. இப்போட்டிகளில் வலய மட்டத்தில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரை முதலிடம் பெற்ற மாணவர்கள் மட்டும் பங்குபற்ற முடியும்.

02. வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் போட்டியின்போது நடுவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

03. பிள்ளைகளின் ஆள் அடையாளத்தை அதிபர் கையொப்பம் இட்ட புகைப்படத்துடன் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

04. மாகாண மட்டப் போட்டிகள் 9.00 மணிக்கு தொடங்கும். எனவே உரிய நேரத்திற்குத் தங்கள் வலயத்தைச் சேர்ந்த பிள்ளைகளை அழைத்துவரும்படி ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர் அறிவுறுத்தவும்.

05. போட்டிகளுக்கு வரும் பிள்ளைகளுக்கு வரையும் தாள்கள் மட்டுமே வழங்கப்படும். ஏனைய உபகரணங்கள், பொருட்கள் முதலானவற்றைப் பிள்ளைகள் கொண்டுவர வேண்டும்.

06. உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பிள்ளைகளை அழைத்துவரும்போது அவர்கள் ஒவ்வொருவரும் வலய மட்டத்தில் வரைந்த சித்திரங்களைத் தவறாது எடுத்துவர வேண்டும்.

07. போட்டி நடைபெறும் இடத்தில் நடுவர்களைத் தவிர யாருமே அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

08. பிள்ளைகளுக்கான சுட்டிலகம் போட்டி நடைபெறும் மண்டபத்தில் வழங்கப்படும். அத்துடன் பிள்ளைகளுக்குத் தேவையான சிற்றுண்டி சாப்பாடுகளைஎடுத்து வரவேண்டும் என்றும் அறிவிக்கபட்டுள்ளது. (109)

# வடக்கில் கிளையைப் பரப்புகிறது பிரதேச அபிவிருத்தி வங்கி

வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உந்துசக்தியாக அமையும் வகையில் தனது 11 கிளைகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரதேச அபிவிருத்தி வங்கி திறந்துள்ளதாக வங்கியின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். கஷ்ட பிரதேச விவசாயிகள் மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு வங்கி நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் கடந்த வருடம் இவ் வங்கி ஆரம்பிக்கப்பட்டது. மேலும் அடுத்த வருடத்தினுள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேலும் 10 வங்கிக் கிளைகளை திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பிரதேச அபிவிருத்தி வங்கியானது அரச உடமையான அனுமதி பெற்ற சிறப்புத் தேர்ச்சி பெற்ற வங்கியாகும் இது தற்போது நாடுபூராகவும் 250 கிளைகளை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தருணம் பார்த்து திருடர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத் தேர்திருவிழாவிற்கு சென்றவரின் வீட்டில் இருந்து சுமார் ஒரு இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட நகைகள் திருட்டுப போயுள்ளதாக நேற்றுப் பகல் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய தேர்த் திருவிழாவில் கலந்துவிட்டு ஆலயத்திற்கு அண்மையில் உள்ள தனது வீட்டிற்கு சென்ற குடும்பஸ்தர் வீட்டின் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதைப் பார்த்து திகைப்படைந்துள்ளார். இதனைத் தொடர்ந்து வீட்டினுள் சென்று பார்த்த வேளையில் வீட்டின் உட்புறம் இருந்த அலுமாரிகள் யாவும் திறக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன் அங்கிருந்த சங்கிலி, மோதிரம் போன்ற ஆபரணங்கள் திருட்டு போயுள்ளதையும் கண்டுள்ளார். இது விடயமாக தெல்லிப்பளை பொலிஸில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நோர்வேத் தாக்குதல் புலிகளுக்குத் தொடர்பு?

(கொழும்பு)

அண்மையில் நோர்வேயில் மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்திய நபருக்கும் புலிகளுக்கும் தொடர்பு இருக்கக் கூடும் என இலங்கை நம்பிக்கை வெளியிட்டுள்ளது. 32 வயதான அன்ட்ரேஸ் பிரிங் பிவிக்கினால் நடத்தப்பட்ட தாக்குதலில் 76 பேர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் ஆகிய தாக்குதல்களின் மூலம் பலரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலை நடத்திய பிரிவிக்கிற்கும் புலிகளுக்கும் தொடர்பு இருக்கக்கூடும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. விசாரணைகளின் போது குறித்த நபருக்கும் புலீகளுக்கும் இடையில் இருக்கக் கூடிய தொடர்புகள் பற்றியும் ஆராயவேண்டுமென இலங்கை இராஜதந்திர ரீதியிலான கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது. புலிகளின் தாக்குதல் பாணியில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கோர விபத்து; 17 பேர் காயம்




பேராதனை - கம்பளை வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 17 பேர் காயமடைந்துள்ளனர். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அக்பர் விடுதிக்கு அருகில் கொழும்பிலிருந்து கம்பளை நோக்கி சென்ற பஸ் வண்டியும் கம்பளையிலிருந்து கண்டி நோக்கி வந்த பஸ் வண்டியும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் காயமடைந்த 17 பேரும் பேராதனை போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை போரதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.